# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 கார்த்திகை 03 ஞாயிற்றுக்கிழமை (19.11.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:353


## தாண்டிக்குளத்தில் கிளைமோர்; 5 படையினர் பலி! பதிலுக்கு இராணுவம் சூடு; 5 மாணவர்கள் மரணம்!!

வவுனியா, நவ.19

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் - ஏ-9 வீதியில் நேற்றுக்காலை 9 மணியளவில் இராணுவத்தினர் பயணம் செய்த 'டிரக்' வண்டி ஒன்றை இலக்கு வைத்து நடத்தப்பட்ட கிளை மோர் தாக்குதலில் அதிகாரி ஒருவர் உட்பட 5 படையினர் உயிரிழந்தனர். 2 படையினர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து இராணுவத்தினர் அப்பகுதியில் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் சம்பவ இடத்துக்கு மிக அருகில் உள்ள அரச விவசாயக் கல்லூரி ஒன்றின் முதலாம் வருட மாணவர்கள் ஐவர் பரிதாப கரமாக உயிரிழந்தனர். 10 பேர் படுகாய மடைந்தனர்.

காயமடைந்த படையின்ரும், மாணவர்களும் வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அனுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர்.

மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியைச் சேர்ந்த இராமச்சந்திரன் அச்சுதன் (வயது25), சுந்தரலிங்கம் சிந்துஜன் (வயது 21), ஏறாவூரைச்சேர்ந்த சிந்திக் றிஸ்வான் முகமட் (வயது 22), திருமலையைச் சேர்ந்த சித்திரவேல் கோபிநாத் (வயது 22), வவுனியா மன்னார் வீதியைச் சேர்ந்த திருநாவுக்கரசு சிந்துஜன் (வயது 21) ஆகிய மாணவர்களே இந்தச்சம்பவத்தில் கொல்லப்பட்டனர் என அடையாளம் காணப்பட்டிருக்கின்றனர்.

இச்சம்பவத்தில் கே.விமலினி (வயது 22 - கிளிநொச்சி), எஸ்.சிவாஜினி (வயது 23 - கோயில்வீதி, நல்லூர்), குமுதினி மகா

(10ஆம் பக்கம் பார்க்க)

# அப்பாவி மக்களைக் கொல்லும் தந்திரங்களை விட்டு அரசியல் தீர்வுக்கு ஸ்ரீலங்காவிடம் வற்புறுத்துவோம்



## வைகோவுக்கு எழுதிய கடிதத்தில் பிரதமர் மன்மோகன் சிங் தகவல்



புதுடில்லி, நவம்பர்19

அப்பாவிப் பொதுமக்களை கொல்லும் தந்திரங்களைக் கையாள்வதை விட்டு தமிழ் மக்களின் உண்மையானதும் சட்ட பூர்வமானதுமான உரிமைகளை பேச்சுவார்த்தை மூலம் வழங்கி அரசியல் தீர்வு ஒன்றைக் காணவேண்டும்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா அரசிடம் இந்தியா வற்புறுத்த உள்ளதாக பிரதமர் மன்மோகன் சிங், மறுமலச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் வைகோவுக்கு எழுதிய கடிதத்தில் உறுதி அளித்துள்ளார்.

ஏ-9 பாதையை மூடி யாழ்ப்பாணம் தீபகற்ப மக்களை பட்டினி நிலையை உருவாக்கியிருப்பது, பஞ்சாப்பில் இலங்கை விமானப் படையினருக்கு பயிற்சி அளிப்பது ஆகியன தொடர்பாக வைகோ இந்தியப் பிரதமருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி இருந்தார்.

அந்தக் கடிதத்துக்குப் பதிலளித்து இம் மாதம் 12ஆம் திகதி பிரதமர் மன்மோகன் சிங் எழுதிய கடிதம் நேற்று ஊடகங்களுக்கு வெளியிடப்பட்டது.

அந்தக் கடிதத்தல் பிரதமர் மன்மோகன் சிங் குறிப்பிட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு :-

◆ அண்மையில் இலங்கையில் சிவிலியன்கள் கொல்லப்பட்டமை குறித்தும் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டமை குறித்தும் உரிய மட்டத்தில் இலங்கையிடம் பேசி வருகிறோம்.

◆ ஆகப்பிந்தி இலங்கையில் அப்பாவி மக்கள் மிகக் குறிப்பாக பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட தமிழர்கள் உயிரிழந்தமை எங்கள் எல்லோருக்கும் பெரும் கவலையையும் வருத்தத்தையும் தந்துள்ளது.

◆ இதுபோன்ற வன்செயல்கள், குறிப்பாக பெண்கள், குழந்தைகள் ஆகிய அப்பாவி மக்களைக் கொல்வது எந்த வகையிலும் நியாயப்படுத்தக் கூடியதல்ல என்பதை நாம் தொடர்ந்து சுட்டிக்காட்டி வருகிறோம்.

◆ ஒக்ரோபர் மாதத்தில் ஜெனிவாவில் இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வி அடைந்ததை நான் அறிவேன். அந்தத்தோல்வி இரண்டு தரப்புக்களையும் கடினப்போக்கைக் கைக்கொள்ள வைத்துள்ளது. இது மிகவும் துரதிர்ஷ்டமானது என்றே நாம் கருதுகிறோம். கடினப்போக்கின் விளைவே

(10ஆம் பக்கம் பார்க்க)

## வவுணதீவு நோக்கி நேற்று அதிகாலை படை நடவடிக்கை

மட்டக்களப்பு, நவ.19

மட்டக்களப்பு வவுணதீவு நோக்கி நேற்றுமுன்தினம் இரவு படையினர் மேற்கொண்ட படைநகர்வு முயற்சியை முறியடித்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

கடும் தாக்குதலை நடத்தி படை நடவடிக்கைகளை முறியடித்தனர் என்றும் - நேற்றுக்காலை முதல் மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலில் இருவர் காயமடைந்தனர் என்றும் - விடுதலைப் புலிகள் மேலும் தெரிவித்தனர்.

படையினருக்கு ஏற்பட்ட சேத விவரம் தெரியவரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (1)

### நாடாளுமன்றத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிக்கு மாறாக

## வாகரை சென்ற உணவு லொறிகள் நேற்றும் திருப்பி அனுப்பப்பட்டன

மட்டக்களப்பு, நவ.19

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் நிர்வாகப் பிரதேசமான வாகரைப் பகுதிக்கு நேற்று பத்து லொறிகளில் எடுத்துச்செல்லப் பட்ட உணவுப் பொருள்கள் நாவலடி முகாமில் வைத்துத் திருப்பி அனுப்பப்பட்டன.

செஞ்சிலுவைச் சர்வதேசக்குழுவின் வழித்துணையுடன் இந்த லொறிகள் வாகரை நோக்கிச் சென்றன.

செங்கலடியில் தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளதாகத் தெரிவித்து லொறி கள் செல்வதற்குப் படையினர் அனுமதிக்க வில்லை என்றும் -

மீண்டும் இன்று அந்தப்பொருள்களை வாகரைக்கு எடுத்துச்செல்ல நடவடிக்கை எடுக்கப்படுகின்றன என்றும் - தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினமும் 6 லொறிகளில் எடுத்துச் செல்லப்பட்ட உணவுப் பொருள்கள் திருப்பி அனுப்பப்பட்டிருந்தன.

வாகரைக்கு உணவு அனுப்ப வேண்டும் என்று கோரி நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் விடத்தல்தீவில் நேற்று கடற்படையினர் - புலிகள் மோதல்

கொழும்பு, நவ.19

தலைமன்னார் கடற்பரப்பில் நேற்று அதிகாலை கடற்படையினருக்கும் கடற்புலிகளுக்கும் இடையில் பாரிய மோதல் ஒன்று இடம்பெற்றிருக்கிறது.

மன்னார் விடத்தல்தீவு கடற்பரப்பில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த கடற்புலிகளுக்கு பாதுகாப்பு வழங்கிய தமது படகுகள் மீது கடற்படையினர் வலிந்து தாக்குதல் நடத்தினர் என்றும் -

அப்போது கடற்புலிகள் நடத்திய பதில் தாக்குதலில் கடற்படையினரின் இரண்டு கரையோர ரோந்துப் படகுகள் மூழ்கடிக்கப்பட்டதுடன் மற்றொரு படகும் முற்றாக சேதமடைந்தது என்றும் - விடுதலைப் புலிகளின் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'' இந்த கடற்சமரில் 10 கடற்படையினர் பலியாகினர். கடற்புலிகள் தரப்பில் ஐவர் காயமடைந்தனர்'' என்று விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இ.இளந்திரையன் தெரிவித்திருக்கிறார்.

எனினும் இராணுவத் தரப்பில் இந்தக் கடற் சமர் தொடர்பாக கருத்துத் தெரிவித்த பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல ''கடற்புலிகளின் படகுகள் இரண்டை கடற்படை யினர் தாக்கி அழித்தனர்'' என்று கூறினார்.

''கடற்படையினர் தரப்பில் ஒருவர் உயிரிழந்தார். புலிகள் தரப்பில் 25 இற்கும் மேற்பட் டோர் உயிரிழந்திருக்கக் கூடும் என்று கடற்படையினர் தெரிவித்திருக்

(10ஆம் பக்கம் பார்க்க

## கோஷங்கள், சுலோகங்களுடன் கூட்டணி எம்.பிக்கள் ஆர்ப்பாட்டம்

### நாடாளுமன்றின் நடுவே நடத்தினர்

கொழும்பு, நவ.19

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுச் சபையில் காலை முதல் நண்பகல் வரை தொடர்ச்சியாகப் பெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

வரவு - செலவுத்திட்டம் மீதான இரண்டாம் நாள் வி[illegible] கூட்டமைப்பைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் ஆசனங்களை விட்டெழுந்து கோஷங்களை எழுப்பியவாறே சபையின் நடுவே சென்றனர்.

சபைக்கு நடுவே செல்லும்போது ''ரவிராஜின் கொலைக்கு டக்ளஸைக் கைதுசெய்'' [illegible] வாறே ந[illegible]ந்தனர்.

அங்கு சென்றதும், சபாநாயகரின் ஆசனத்துக்கு முன்னால் நின்று உரத்த குரலில் பல கோஷங்களை எழுப்பினர்.

கூட்டமைப்பு எம்.பிக்களின் கோஷங்களுக்கு மத்தியில் சபாநாயகர் ஐ.தே.கட்சி எம்.பி காமினி ஜெயவிக்ரம பெரேராவை உரையாற்ற அழைத்தார். அவர் பேசுவதற்கு எழுந்த போதிலும் கூட்டமைப்பு எம்.பிக்களின் கோஷங்களால் எழுந்த பெரும்

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# வாகரைக்கு உணவுப் பொருள் அனுப்ப அரசு நாடாளுமன்றில் வாக்குறுதியளிப்பு

## • ஆர்ப்பாட்டத்தை நிறுத்தினர் கூட்டணி எம்.பிக்கள்

கொழும்பு, நவ.19

பட்டினியால் வாடும் வாகரை மக்களுக்கு பத்து லொறிகளில் உணவுப் பொருள்கள் உடனடியாக அனுப்பி வைக்கப்படுமென அரசு உத்தரவாதம் அளித்ததையடுத்து கூட்டமைப்பு எம்.பிக்களின் ஆர்ப்பாட்டம் நேற்று பி.ப 1.30 மணியளவில் முடிவுக்கு வந்தது.

கூட்டமைப்பு எம்.பிக்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நேற்று நாடாளுமன்றில் முன்னெப்போதும் இல்லாதவாறு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

ஆர்ப்பாட்டம் நடந்துகொண்டிக்கும் போதே வர்த்தக அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோபுள்ளே கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தன் உட்பட ஏனைய எம்.பிக்களுடன் பேச்சு நடத்தினார். வாகரைக்கு உணவுப் பொருள் அனுப்பப்பட்டுள்ளன. நீங்கள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் என அமைச்சர் பெர்ணான்டோபுள்ளே கூறுவதைக் கேட்கக் கூடியதாக இருந்தது.

இரா. சம்பந்தன் எம்.பி கையடக்கத் தொலைபேசி மூலம் மட்டக்களப்பு அரச அதிபருடன் சபையின் நடுவே இருந்தவாறு தொடர்பு கொண்டு பேசுவதையும் கேட்கக் கூடியதாகவிருந்தது. இந்தச் சந்தர்ப்பத்திலும் சபைக்கு நடுவே ஆர்ப்பாட்டம் தொடர்ந்தது.

### குரல் எழுப்பிக் களைத்த கஜேந்திரன்

யாழ்.மாவட்ட எம்.பி எஸ்.கஜேந்திரன் உரக்கக் குரல் எழுப்பிக் கோஷமிட்டுக் களைத்திருந்தார். அவர் அமைச்சர் சீ.பி.ரத்னாயக்காவைப் பார்த்துக் கையசைக்கவே அவர் தண்ணீர்ப் போத்தலொன்றை கஜேந்திரன் எம்.பியை நோக்கி வீசினார். லாவகமாக அதைப் பிடித்துக் கொண்ட கஜேந்திரன் எம்.பி. நீரை மட மடவென்று குடித்து விட்டு மீண்டும் குரல் எழுப்பத் தொடங்கினார்.

### மேற்சட்டையைக் கழற்றி இடுப்பில் சொருகிய சிவாஜிலிங்கம்

இன்னொரு சந்தர்ப்பத்தில் கோஷமிட்டுக் களைத்திருந்த சிவாஜிலிங்கம் எம்.பி அவரது மேற்சட்டையைக் கழற்றி இடுப்பில் சுற்றிக்கொண்டார். இது நாடாளுமன்ற நடைமுறைக்கு முரணானது எனத் தெரிவித்து சில அரசதரப்பு எம்.பிக்கள் சிவாஜி லிங்கத்துக்கு அருகே சென்று மீண்டும் மேற்சட்டையை அணிவித்தனர்.

கூட்டமைப்பு எம்.பிக்களின் பலத்த கோஷசத்திற்கு மத்தியிலும் சில அரச தரப்பு எம்.பிக்கள் உரையாற்றினர். அரசு வழங்கிய உறுதிமொழியை அடுத்து பி.ப 1.30 மணியளவில் இரா.சம்பந்தன் அறிக்கை ஒன்றை விடுத்தார். அத்துடன் ஆர்ப்பாட்டம் முடிவடைந்தது. (அ-உ)

## இரு சடலங்கள் மீட்பு

அச்செழு, திருநெல்வேலி பாற்பண்ணை ஆகிய இடங்களில் இருந்து நேற்றுக் காலை இருவரது சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

நீர்வேலியைச் சேர்ந்தவரான முருகையா தர்மசீலன் (வயது - 26) என்பவரது சடலம் அச்செழுவிலும்- திருநெல்வேலியைச் சேர்ந்தவரான நாகேஸ் விநோதன் (வயது 22) என்பவது சடலம் பாற்புண்ணை வீதியிலும் மீட்கப்பட்டுள்ளன. இரண்டு சடலங்களும் மரண விசாரணைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. சடலங்களில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவர்கள் இருவரும் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இனந்தெரியாதவர்களால் வீட்டிலிருந்து கடத்திச் செல்லப்பட்டதாகவும் அறியவந்தது. (1-203-15)

# மடு உற்சவத்துக்கு சென்றவர்கள் இன்று குடாநாடு திரும்புகின்றனர்

திருகோணமலை, நவ.19

கடந்த ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற மடுத்தேவாலய உற்சவத்திற்கு சென்று குடாநாட்டுக்கு திரும்ப முடியாது, அங்கு தங்கியிருந்த 300 பேர் இன்று கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்படவுள்ளனர்..

பேசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்த இவர்கள் ஏழு பஸ்கள் மூலம் திருகோணமலைக்கு நேற்றுக் கூட்டி வரப்பட்டனர்.

'கிறீன் ஓசானிக்' என்ற கப்பல் மூலம் இவர்கள் இன்று காலை காங்கேசன் துறைக்கு அழைத்து வரப்படவிருக்கின்றனர். (அ-1-151)

HOLY CROSS SCHOOL OF NURSING

Diploma in Nursing
2 Years

விண்ணப்ப இறுதித்திகதி - 23.12.2006
நேர்முகத் தெரிவு - 30.12.2006
வகுப்புகள் ஆரம்பம் - 10.01.2007
பதிவுக்கட்டணம் - ரூபா 500/=
கற்கை நெறிக் கட்டணம் - ரூபா 500/=

க.பொ.த. உயர்தரத்தில் 3 பாடங்களில் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பங்களை திருச்சிலுவை சுகநல நிலையம், 769, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம். எனும் முகவரிக்கு சுய விலாசமிடப்பட்ட முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் அனுப்பி வைக்கவும்.

பணிப்பாளர்.
திருச்சிலுவை சுகநல நிலையம்.

வீடு விற்பனைக்கு

ஞானபாஸ்கரோதய வீதி, கல்வியங்காடு 2 1/2 பரப்பு காணியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: செ.குகதாசன்
119, செல்லர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

## பெயர் மாற்றம்

*மணல்தெரு, உடுப்பிட்டி வடக்கு என்னும் முகவரியைச் சேர்ந்த சுந்தரம் சீதேவி ஆகிய நான் எனது பெயரை 18.11.2006 முதல் கிருஷ்ணன் ஸ்ரீரங்கம் என பெயர் மாற்றம் செய்துள்ளேன் என்பதை சகல ஆவணங்களிலும் இப் பெயரையே பாவிப்பேன் என்பதை இத்தால் சகலருக்கும் அறியத்தருகின்றேன்.*

**கிருஷ்ணன் ஸ்ரீரங்கம்.**

## தையல் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

வலி. தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவில் கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையுடன் பிரதேச மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஊடாக அடுத்தஆண்டு நடத்தப்படவுள்ள பெண்களுக்கான தையல்பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஒரு வருட காலமாக நடைபெறவுள்ள இப்பயிற்சி நெறிக்கு 18 வயதுக்கும் 35 வயதுக்கும் இடைப்பட்ட வயதையுடைய பெண்கள் நாளை திங்கட் கிழமைக்கு முன்னர் 'பிரதேச செயலர், பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்' என்ற முகவரிக்கு விண்ணப்பிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேர்முகப் பரீட்சைமூலம் தெரிவு செய்யப்படுபவர்களுக்கு பயிற்சிக் காலத்தில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும்.

வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள பெண்களுக்கு இப் பயிற்சி நெறியில் முன்னுரிமை வழங்கப்படும் என்றும் பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (203 -135)

## மரண அறிவித்தல்கள்

### மாணிக்கம் சுந்தரலிங்கம்

**(மயிலிட்டி காசநோய் வைத்தியசாலை ஓய்வுபெற்ற ஊழியர்)**

அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் ஆனந்தா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் சுந்தரலிங்கம் நேற்று (18.11.2006) சனிக்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று மானிப்பாயில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

உதயதாரகை
ஆனந்தாவிதி, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

### நல்லதம்பி மணிதிருநாவுக்கரசு

**(இளைப்பாறிய உதவி முகாமையாளர், இலங்கை வங்கி)**

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் தற்போது 12/1, பள்ளிவாசல் வீதி, கொழும்பு - 15 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி மணிதிருநாவுக்கரசு நேற்று (18.11.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முதுதமிழ்ப்புலவர் நல்லதம்பி-நாகரத்தினம் தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், அராலி காலஞ்சென்ற இராசையா - சத்தியவதி தம்பதியரின் மருமகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், பிரபாகரன் (ஜேர்மனி), யசோதரா (கனடா), செந்தூரன் (கணக்காளர்), ஜெயசாந்தினி (ஆசிரியை) ஆகியோரின் அன்புத்தந்தையும், சர்வேஸ்வரி (ஜேர்மனி), சாமிநாதன் (கனடா) ஆகியோரின் மாமனும், ஜதுர்ஷன், ஸபரிஷா, அன்பரசன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற திருமதி கதிரமலைநாதன், விவேகானந்தன் (லண்டன்), திருமதி வேலாயுதபிள்ளை, சிவச்செல்வன் (நைஜீரியா), திருமதி ராஜேந்திரன், திருமதி வைத்தியநாதன், சிவநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற துரைரத்தினம் (இந்தியா), லக்ஷ்மணானந்தசிவம் (பிரேசில்), திருமதி தயானந்தா (இந்தியா) ஆகியோரின் மைத்துனரும் அம்பலவாணநாதன் தம்பதியர், காலஞ்சென்ற நாகராசா தம்பதியர் ஆகியோரின் அன்புச் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொ.பே:
011-4957934

தகவல்:
குடும்பத்தினர்.

# அத்தியாவசியப் பொருள்களுக்கு செயலகம் விலை நிர்ணயம்

யாழ்ப்பாணம், நவ.19

குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் நிர்ணயிக்கப்பட்ட விலைகளை அரச அதிபர் கே.கணேஸ் நேற்று அறிவித்துள்ளார்.

யாழ் செயலகத்தால் இந்த விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றும்-

குறிப்பிட்ட விலைகளுக்கு உயர்வாக ப.நோ.கூ.சங்கங்களோ அல்லது தனியார் வியாபாரிகளோ பொருள்களை விற்பனை செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும் என்றும்- அரசஅதிபர் தெரிவித்தார்.

பொருள்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலைகள் வருமாறு:

| பாவனைப் பொருள்கள் | அளவு கி.கி | தற்போதைய விற்பனை விலை |
|---|---|---|
| சம்பா அரிசி | 1கி.கி | 40.50 |
| கோதுமை மா | 1கி.கி | 43.00 |
| சீனி | 1கி.கி | 63.00 |
| பருப்பு | 1கி.கி | 73.00 |
| **பால்மா வகைகள்** | | |
| லக்ரோஜன் 1 | 400 கி | 227.00 |
| லக்ரோஜன் 2 | 400 கி | 207.00 |
| அங்கர் 1+ | 400 கி | 173.00 |
| அங்கர் 3+ | 400 கி | 175.00 |
| நெஸ்பிறே 1+ | 400 கி | 200.00 |
| அங்கர் | 400 கி | 167.00 |
| நெஸ்பிறே | 400 கி | 177.00 |
| டயமண்ட் | 400 கி | 157.00 |
| டயமண்ட் | 1 கி.கி | 364.00 |
| கைலண்ட் | 400 கி | 151.00 |
| லக்ஸ்பிறே | 400 கி | 156.00 |
| நெஸ்ரோமோல்ட் | 400 கி | 151.00 |
| அங்கர் (கொழுப்பு நீங்கப்பட்டது) | 400 கி | 212.00 |
| உழுந்து | 1 கி.கி | 129.00 |
| தீப்பெட்டி | 1 | 2.50 |
| **பிஸ்கட்** | | |
| மாறி | 100 கி | 17.00 |
| நைஸ் | 100 கி | 21.00 |
| சொக்லட் கிறீம் | 100 கி | 24.00 |
| மெழுகுதிரி (சிறியது) | 1 | 2.00 |
| **ரின்மீன்** | | |
| கப்டின் | 425 கி | 122.00 |
| டயமண்ட் | 425 கி | 122.00 |
| செத்தல்மிள்காய் | 1 கி.கி | 223.00 |
| தேங்காய் பால்மா | 1 கி.கி | 384.00 |
| தேங்காய் எண்ணெய் | 1லீ | 118.00 |
| கொத்தமல்லி | 1 கி.கி | 82.00 |
| வெந்தயம் | 1 கி.கி | 92.00 |
| பேரீட்சம்பழம் | 1 கி.கி | 100.00 |
| வேர்க்கொம்பு | 1 கி.கி | 244.00 |
| பெருஞ்சீரகம் | 1 கி.கி | 252.00 |
| பூடு | 1 கி.கி | 100.00 |
| கடலை | 1 கி.கி | 144.00 |
| பயறு | 1 கி.கி | 110.00 |
| சர்க்கரை | 1 கி.கி | 78.00 |
| லைபோய் சவர்க்காரம் | 1 | 27.00 |
| லக்ஸ் சவர்க்காரம் | 1 | 24.00 |
| நூடில்ஸ் | 1 கி.கி | 73.00 |
| நுளம்புத்திரி | 5சோடிப்பக்கட் 1 | 48.00 |
| அவல் | 1 கி.கி | 65.00 |
| றவை | 1 கி.கி | 60.00 |
| சோயா | 1 கி.கி | 84.00 |
| கற்கண்டு | 1 கி.கி | 109.00 |
| சன்லைட் சவர்க்காரம் | 1 | 27.00 |
| சலவைத்தூள் ( **Surf Excel**) | 20 கி | 6.00 |
| புளி | 1 கி.கி | 44.00 |
| தேயிலை | 1 கி.கி | 149.00 |
| பற்பசை சிக்னல் | 70 கிராம் | 39.00 |
| பற்பசை சிக்னல் | 40 கிராம் | 29.00 |
| மரக்கறி எண்ணெய் | 1 லீ | 126.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சாயில் கசிப்புக்குகை முற்றுகை; கைதானவருக்கு 2 லட்சம் ரூபா அபராதம்

தென்மராட்சி,நவ.19

கச்சாய்ப் பகுதியில் சட்டவிரோதமாக கசிப்புஉற்பத்தி மேற்கொள்ளப்பட்டுவந்த இடம் ஒன்றை பொலிஸார் முற்றுகையிட்டு பெருமளவிலான கசிப்பு மற்றும் உற்பத்திப் பொருள்கள் என்பவற்றை மீட்டுள்ளனர்.

அத்துடன், இச்செயற்பாட்டில் ஈடுபட்ட நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் இரண்டு லட்சத்து 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அபராதத்தை செலுத்தத் தவறின் 35 மாத சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

கொடிகாமம் கச்சாய் வீதியில் பொலிஸ் நிலையத்திற்கு அண்மித்த பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்யப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து பொலிஸார் அப்பகுதியைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினர்.

அங்குள்ள வீடொன்றிலிருந்து 3 ஆயிரத்து 750 மில்லிலீற்றர் கசிப்பையும் 16 ஆயிரத்து 500 மில்லிலீற்றர் கோடாவையும் கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் உபகரணங்களையும் கைப்பற்றியதுடன் சந்தேகநபர் ஒருவரையும் பொலீஸார் கைதுசெய்தனர்.

இந்நபரை கடந்த 9ஆம் திகதி சாவகச்சேரி நீதிமன்றில் பொலீஸார் ஆஜர்செய்த போது வழக்கை விசாரித்த நீதிவான் ஒரு லட்சத்து 25ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது டன் அபராதத் தொகையை செலுத்தத்தவறின் 35 மாதங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டுமெனவும் உத்தரவிட்டார்.

அத்துடன் இந்நபரை 25ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நீதிமன்றினால் ஏற்கக்கூடிய இரு ஆட்பிணையிலும், இரண்டுவருட நன்னடத்தைப் பிணையிலும் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

மேலும் இதுபோன்ற குற்றச்செயல்களில் ஈடுபடமாட்டேன் என நீதிமன்றுக்கு எழுத்து மூலம் கடிதம் சமர்ப்பிக்கவேண்டுமெனவும், தினமும் காலை 9 மணிக்கும் பி.ப. 4 மணிக்குமிடையில் நீதிமன்றில் கையொப்பமிடல் வேண்டுமெனவும் நீதிவான் உத்தரவிட்டார். (203)

# நெற்பயிருக்கு உரிய காலத்தில் பசளை இல்லை; விளைச்சல் பாதிப்படையும் அபாயம் ஏற்பட்டுள்ளது

## விவசாயிகள் கவலை தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,நவ.19

வலி. தென்மேற்கு - வலி. மேற்கு பிரதேச செயலர் பகுதியில் உள்ள நெற்பயிற்களுக்கு உரிய காலத்தில் யூரியா உர பசளை இடப்படாமையால் நெற்பயிர்கள் வளர்ச்சி குன்றி மஞ்சள் நிறமாக மாறியுள்ளது.

இதனால் விளைச்சல் பாதிப்படையும் அபாயம் தோன்றியுள்ளது. விரைவில் நெற்பயிருக்கு தேவையான உரம் (யூரியா) இடப்படாவிட்டால் நெற்செய்கையை கைவிடவேண்டிய அவல நிலையேற்படுமென விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர். உரத்தினை பெற்றுக்கொள்வதற்காக கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னரே விவசாயிகள் சம்மேளனங்கள் வழங்கிய உரமானிய படிவங்கள் பூர்த்தி செய்து அனுப்பப்பட்டுள்ளதாகவும் -

ஆனால் நெற்செய்கைக்கு அவசியமான யூரியா உரம் இதுவரை கிடைக்கவில்லை எனவும் விவசாயிகள் கூறியுள்ளனர்.

விவசாயிகள் 4ஆயிரம் ரூபா முதல் 5 ஆயிரத்து 500 ரூபா வரை விதை நெல்லை பெற்று நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் யூரியா உரப்பசளை இல்லாததால் தமக்கு பெரும் நட்டம் ஏற்படலாம் என்று அச்சம் கொண்டுள்ளனர்.

இதேவேளை -

நெற்பயிருக்கு தேவையான களைநாசினிகளுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றதாகக் கூறப்பட்டுள்ளது. (203 - 95)

# யாழ். குடாநாட்டில் வனவள அபிவிருத்திக்கு 13 கிராமங்கள் விவசாயப் பகுதியினால் தெரிவு

யாழ்ப்பாணம்,நவ.19

குடாநாட்டில் வனவளத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் முன்னெடுக்கப்பட்டுள்ள திட்டத்தின் கீழ் 13 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

மாகாண விவசாயத் திணைக்களம் ஒதுக்கியுள்ள அபிவிருத்தி நன்கொடை நிதி மூலம் குடாநாட்டில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டம் சகல பிரதேச செயலர் பிரிவிலும் அறிமுகப்படுத்தப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக யாழ். விவசாயத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:-

காரைநகர், மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவுகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளில் இருந்து 13 கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அங்குள்ள ஐநூற்று 23 குடும்பங்கள் இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா மூன்று சமண்டலை, நான்கு கமுகு, அகத்தி ஒன்று கறி முருங்கை நான்கு, நெல்லி ஒன்று, கறி வேம்பு இரண்டு என்ற வீதத்தில் நாற்றுக்கள் இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த மரங்களின் இலை, காய், பழம் என்பன உணவுத் தேவைக்காகவும், தண்டுகள் விறகிற்காகவும் பயன்படுத்தக் கூடியதாக இருப்பதுடன் நிழல் பயன்பாட்டையும் பெற்றுக்கொள்ள முடியும்.

பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்வதுடன் சுற்றுச் சூழலில் ஏற்படும் தாக்கங்களை சமநிலைப்படுத்தவும், இந்த திட்டம் உதவுமெனவும் இது ஒரு நீண்ட கால மேம்பாட்டுத் திட்டமென்றும் அவர் கூறினார். (203 - 88)

# முன்னர் ஏற்றுமதியான கடலுணவுகள் இப்போது குடாநாட்டுச் சந்தைகளில்

## ஏ-9 பாதை மூடப்பட்டமையே காரணம்

ஏ-9 நெடுஞ்சாலை மூடப்பட்டு போக்குவரத்து நடைபெறாதனால் இதுவரை ஏற்றுமதி செய்யப்பட்டுவந்த கடலுணவுகள் சில சந்தைப்படுத்தப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

குருநகர் சின்னக்கடைப் பொதுச் சந்தையில் இயங்கும் மீன் சந்தையில் பெரிய மீன், சிறியவகை சிங்க இறால்கள் போன்றன சந்தைப்படுத்தப்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது.

இவற்றில் பெரிய சிங்க இறால் ஒன்று 500 ரூபாவாகவும் சிறிய சிங்க இறால் ஒன்று 200 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

ஏ-9 பாதை திறந்து போக்குவரத்து நடைபெற்ற காலங்களில் இந்த உணவுகள் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (203-51)

# யாழ்.நகர வீதியோரங்களில் சைக்கிள்கள் நிறுத்தத் தடை

யாழ்ப்பாணம்,நவ.19

யாழ்ப்பாணம் பிரதான வீதியோரங்களில் சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களை நிறுத்துவதற்குப் படையினர் தடை விதித்துள்ளனர்.

நகரப் பகுதிகளிலுள்ள வர்த்தக நிலையங்களுக்குச் செல்வோர் கடைகளின் முன்னால் தமது வாகனங்களை நிறுத்திவிட்டுச் செல்வது வழமை.

ஆனால் நேற்றுமுன்தினம் முதல் இதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-203-79)

# குருநகருக்கான குடிதண்ணீர் விநியோகம் இன்று சீராகும்

யாழ்ப்பாணம்,நவ.19

குருநகர் பகுதி மக்களுக்கான குழாய் மூலமான தண்ணீர் விநியோகம் இன்று வழமைக்குத் திரும்பும் என்று யாழ்.மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

பலாலி வீதியில் திருநெல்வேலிக்கு அண்மையில் நிலத்தின் கீழ் செல்லும் தண்ணீர் குழாயில் வெடிப்பு ஏற்பட்டிருந்தது.

இதன் காரணமாகக் கடந்த 10ஆம் திகதியில் இருந்து நேற்றுவரை குருநகர்ப் பகுதிக்கான தண்ணீர் விநியோகம் தடைப்பட்டிருந்தது.

வெடிப்பு ஏற்பட்ட பகுதி நேற்று இனங்காணப்பட்டு திருத்தவேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் -

இன்று முதல் தண்ணீர் விநியோகம் சீராகும் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (1-203)

# வாசகர் திருமுகம்

## உடல் நலம் குன்றி அவதியுறுவோருக்கு நடமாடும் வைத்திய சேவை தேவை

இணுவில், உடுவில், கோண்டாவில், தாவடி போன்ற கிராமங்களில் கடந்த ஒரு மாத காலமாக கடும் காய்ச்சலினால் குடும்பம் குடும்பமாக மக்கள் பெரிதும் துன்பப்பட்டு வருகின்றனர். கிராமங்களிலுள்ள தனியார் வைத்தியசாலைகளும் அரச மருத்துவமனையும் மக்களுக்கு மருத்துவ உதவி வழங்கிவருகின்றன. எனினும் அவர்களிடம் போதிய மருந்து வசதியின்மையால் நோயாளரின் வேதனையை தீர்க்க முடியவில்லை. பசியின் கொடுமை, ஊட்டச்சத்து உணவின்மையின் தாக்கம் தொடர்கதையாக மக்களை வருத்திவரும் இவ்வேளை, காய்ச்சல் மக்களை மிக மிக வேதனைக்கு ஆட்படுத்தியுள்ளது.

இணுவில் கந்தசாமி கோவில் அருகே கோயில் குருக்கள் ஒருவர் காய்ச்சலின் துன்பத்தால் இறந்துள்ளார். பல குழந்தைகளும் முதியவர்களும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். பனடோல், சோடா எதுவுமே கடைகளில் இல்லை. இக்கொடுமையை அரசாங்கம் அறிந்தும் அறியாததாக உள்ளது. பாதைத் தடையால் ஏற்பட்டு வரும் மனிதாபிமான உபாதைகள் எத்தனை எத்தனை? யாழ். மாவட்ட சுகாதார பணிப்பாளர் ஆக்க பூர்வமான சேவைகளைச் செய்து வருகிறார். அவசர கால அம்புலன்ஸ் சேவை தொடக்கம் குடாநாட்டு மக்களுக்கு இயன்ற உதவி வழங்கும் செயற்திட்டங்களை உருவாக்கி வருபவர்.

தயவு செய்து காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ள மேற்படி கிராமங்களுக்கு ஆறுதல் தரக்கூடிய நடமாடும் வைத்தியப் பணியை உடன் ஆரம்பித்து உதவுமாறு மனித நேயத்துடன் வேண்டுகிறோம். நோயாளர்கள் வைத்தியசாலைக்குச் செல்ல போக்குவரத்து வசதியின்றி மிகவும் துன்பப்படுகிறார்கள். எரிபொருள்களுக்கும் பெரும் தட்டுப்பாடும், பற்றாக்குறையும் ஏற்பட்டுள்ள இக்காலகட்டத்தில் வாடகைக்கு வாகனங்களை அமர்த்துவதோ, ஏன் சொந்த வாகனங்களை பயன்படுத்துவதோ இயலாத காரியம். வசதி குறைந்த மக்கள் வாடகைக்கு வாகனம் அமர்த்தக்கூடிய காலமா இது?

ஆகவே நடமாடும் வைத்திய வசதியை மிகவும் துரிதமாக செயற்படுத்தவேண்டும்.

**ஆ.சிவமைந்தன்**
**(பாதிக்கப்பட்டவர்கள் சார்பில்)**

*இணுவில்.*

## பண்புள்ளவர்களா இவர்கள்?

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்திலிருந்து ஊர்காவற்றுறை செல்லும் பஸ்ஸில் பிரயாணம் செய்யும் வாய்ப்பு அண்மையில் கிடைத்தது.

அநேகமாக பிரயாணிகள் எல்லோருமே தீவகத்தில் கடமையாற்றும் அரச ஊழியர்கள், கணிசமான எண்ணிக்கையினர் பெண்கள்.

காலையில் நேரகாலத்துடன் பஸ் நிலையம் வந்த பெண்கள் பலர் ஆசனத்தில் அமர்ந்திருந்தனர். பஸ் நிறைந்த பிரயாணிகளுடன் பண்ணைச் சோதனைச் சாவடியில் பஸ் தரித்து சோதனை முடிந்து புறப்பட்டதும் அவ்வேளை ஆண்களில் பலர், ஆவேசம் வந்தவர்கள் போல பஸ்ஸைத் துரத்திக்கொண்டே ஓடி, ஓடும் பஸ்ஸில் ஒருவருக்கொருவர் இடிபட்டு, மிதிபட்டு பஸ்ஸினுள் தாவி ஏறிக்கொண்டிருந்தனர்.

எனக்கு இந்தக் காட்சி மிகவும் அருவருப்பாக இருந்தது. அருகில் நின்ற பாதுகாப்புப் படையினரும் இந்தக் காட்சியைக் கண்டு ஏளனமாய்ச் சிரித்தனர்.

பின்னர் பஸ்ஸினுள் ஏறிப்பார்த்தபோது ஆசனங்கள் யாவும் ஆண்களால் நிறைந்திருந்தன. அவர்களுள் பலர் ஆவேசம் வந்து ஓடியேறியவர்கள். பெண்கள் ஒன்றும் செய்வதறியாது நின்றுகொண்டே பிரயாணம் செய்தனர். அல்லைப்பிட்டியிலும் இதே கதைதான்.

இந்தக் காலத்தில் இத்தகைய மனிதர்கள் எமது சமூகத்தில் வாழும் நிலையை எண்ணி எனக்குள்ளே மனம் வருந்தினேன். இவர்களுக்கு அம்மா, அக்கா, தங்கை மனைவி என்று உறவுகள் இல்லையா? தமது ஆசனங்களைத் தராதுவிட்டாலும், மற்றவர்களின் அதுவும் பெண்களின் ஆசனங்களை ஆக்கிரமித்து அவர்கள் நெரிபட்டு, இடிபட்டு பிரயாணம் செய்வதை இவர்கள் என்ன வகையில் உள்வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்? இவர்களை மனித ரகங்களில் எதில் சேர்ப்பது? யாரால் திருத்தக் கூடும்?

**ந.பாஸ்கரன்.**

*ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

# கண்டெடுத்த பொருள்கள்

யாழ்ப்பாணம்,நவ.18

யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தில் இருந்து கடந்த 15ஆம் திகதி ஒரு கைக்கடிகாரமும் 16ஆம் திகதி மோட்டார் சைக்கிள் திறப்பு ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

உரியவர்களை ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். போதனா வைத்தியசாலைக் கணக்காளர் கேட்டுள்ளார். (203)

# தென்மராட்சியிலுள்ள ப.நோ.கூ.சங்கங்களில் இன்று பொருள் விநியோகம்

தென்மராட்சி,நவ.19

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடைகளில் இன்று தொடக்கம் அரிசி,சீனி,பருப்பு ஆகிய பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

தென்மராட்சி மேற்கு, சாவகச்சேரி, தென்மராட்சி கிழக்கு ஆகிய சங்கங்களில் கையிருப்பில் உள்ள பொருள்களுக்கமைய பங்கீட்டு அட்டைக்கு சம அளவில் பணத்திற்குப் பொருள்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

விரைவில் அடுத்த கட்ட உலர் உணவுப் பொருள்கள் விநியோகம் ஆரம்பிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுவதால் பொதுமக்கள் தமது பங்கீட்டு அட்டையினை சமர்ப்பித்து பொருள்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (203)

# வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் பருவமழையால் வெள்ளம்

வலி.தென்மேற்கு,நவ.19

தற்போது பெய்துவரும் பலத்த மழையினால் வலி.தென்மேற்குப் பிரதேசத்தின் தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது.

இதனால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வீதிகளிலும் ஒழுங்கைகளிலும் வெள்ளம் தேங்கி நிற்பதால் மக்கள் போக்குவரத்திற்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

பல இடங்களில் வெள்ளம் வழிந்தோடுவதற்கு வசதியாக வீதிகளின் குறுக்காக வாய்க்கால் வெட்டப்பட்டுள்ளபோதும் வெள்ளம் ஓடாது தேக்கமடைந்துள்ளது.

வழுக்கையாற்றில் அதிகளவு வெள்ளநீர் பிரவகித்து ஓடுகின்றது. இப்பகுதிகளிலுள்ள குளங்களும் நிரம்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (203-135)

# தென்மராட்சியில் முன்னோடிப் பரீட்சை நாளையே ஆரம்பம்

தென்மராட்சி கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் ஜி.சீ.ஈ.(சாதாரண) தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவிருக்கின்றன.

இந்தப் பரீட்சைகள் நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (1)

# மழை நேரத்தில் குடைபிடித்துக்கொண்டு பஸ்ஸில் பயணம்

தென்மராட்சி,நவ.19

குடாநாட்டில் சேவையில் ஈடுபடும் இலங்கைப் போக்குவரத்துச் சபை பேருந்துகள் சிலவற்றில் பயணிகள் குடைகளைப் பிடித்தவண்ணம் பயணஞ்செய்வதைக் காண முடிகிறது.

மழை பெய்யும் வேளைகளில் பேருந்துகளின் கூரைகளிலிருந்து மழைநீர் ஒழுகுவதால் பயணிகள் இருக்கைகளில் அமரமுடியாமல் குடைகளை விரித்து பிடித்தவண்ணம் நின்றுகொண்டே பயணம் செய்யவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (203)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 80ஆவது பிறந்தநாளும் 110ஆம் நாள் நினைவஞ்சலியும்

மலர்ந்தது 19 ✱ 11 ✱ 1927



மறைந்தது 02 ✱ 08 ✱ 2006

### அமரர் செ.சின்னரத்தினம்

(இளைப்பாறிய அதிபர்)
காட்டுவளவு, வல்வெட்டித்துறை
நினைவில் நீங்காத வேதனை நிரம்பிய
இந்நாளில் உங்களைப் பாசத்துடன் நினைவுகூர்ந்து
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

காட்டுவளவு,
வல்வெட்டித்துறை. (55142)

உங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள்.

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 - 09 - 1942



உதிர்வு 22 - 11 - 1995

### திருமதி தங்கராசா பரமேஸ்வரி

அம்மா எங்களின் அன்புத் தெய்வமே!
நீங்கள் உங்களையே அர்ப்பணித்து வளர்த்து
எங்களைத் தலைநிமிர்ந்து வாழ வைத்தீர்களம்மா!
உடலால் பிரிந்து பதினொரு ஆண்டுகள் கடந்தாலும்
எங்கள் இதயத்தில் உங்களை நாம்
என்றுமே அழியாமல் காக்கின்றோம்
நீங்கள் இறைவனோடு இருக்கின்றீர்கள்
என்று நாம் உணர்கின்றோம்.

தகவல்:
செ.தங்கராசா, கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள். (55304)

## இறைச்சிக்கோழி தேவை

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
**HOTEL ROLES**
340, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P.:222 2808.

## விற்பனைக்கு

1000க்கும் மேற்பட்ட தமிழ்ப் படப் பிரதிகள் (அனைத்தும் SKC ANTI - FUNG45) பதிவு செய்யப்பட்டவை. 1000க்கும் மேற்பட்ட பிரமிட், ஐங்கரன், கொலம்பியா தமிழ்ப் பட VCDக்கள் (அனைத்தும் 3cd கண்ணாடி கவருடன்) விற்பனைக்கு.

தொடர்பு: 021 222 4257

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1960 இல் பிறந்த **UK** இல் குடியுரிமையுள்ள விவாகரத்துப் பெற்ற, பிள்ளைகள் இல்லாத மணமகனுக்கு 38 வயதிற்குக் குறைந்த, ஓரளவு ஆங்கில அறிவுள்ள மணமகள் தேவை. சீதனம் எதிர்பாக்கப்படமாட்டாது. பிள்ளைகள் இல்லாத, தாரமிழந்தவர்களும், விவாகரத்துப் பெற்றவர்களும் விரும்பத்தக்கது.

C/O Uthayan 2932.

## தவறிவிட்டது

உச்சியோடை, மானிப்பாய் வடக்கு என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வராசா பவனம் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல. 527530182V) விசேட அ.அட்டை என்பன 08.11.2006 அன்று யாழ். நகரில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 191, தியாகராஜா கிளினிக், ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.

## வீடு வாடகைக்கு உண்டு

சுன்னாகம் தெற்கு பூதராயர் கோயில் வீதியில் வசதியான வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:
ஸ்ரீ. ஆதவன் 'அபிராமி மகால்'
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
021 226 3403

## ஒத்துமாறல்

கொட்டாஞ்சேனை முஸ்லிம் தேசியக் கல்லூரியொன்றில் ஆரம்பப்பிரிவு கற்பிக்கும் ஆசிரியை ஒருவர், யாழ்ப்பாணத்திற்கு ஒத்துமாற விரும்புகின்றார். மேற்படி பாடசாலையில் தங்குமிட வசதியுண்டு. T.P.0776167332.

# பண்டத்தரிப்பில் வீதி சேதம்

பண்டத்தரிப்பு, பற்றிமா வீதி மற்றும் பொந்தி ஒழுங்கை ஆகியன நீண்டகாலமாகத் திருத்தப்படாத நிலையில் இருந்துவருவதால் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக மக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

மழை வெள்ள காலத்தில் இப்பகுதி மக்கள் இவ்வீதியில் பயணிப்பதில் பலத்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இவ்வீதிகளைப் புனரமைப்புச் செய்துதருமாறு பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கம் வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகப் பொறுப்பதிகாரியிடம் கடித மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (203-135)

## நல்லூர் பிரதேச சபை

**சந்தைகள், இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு விடுவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2007**

07.11.2006ஆம் திகதிய உதயன், தினக்குரல் ஆகிய பத்திரிகைகளில் செய்யப்பட்ட விளம்பரங்களுக்கமைவாக பின்வரும் சந்தைகள், இறைச்சிக்கடைகளைக் குத்தகைக்கு விடுவதற்கான மீள்கேள்வி என்னால் கோரப்படுகின்றது.

| விவரம் | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த தொகை (வற் தவிர்ந்தது) |
|---|---|
| நல்லூர் உப அலுவலகம் | |
| 1. திருநெல்வேலிச் சந்தை (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையத்துடன்) | ரூபா 4517780.00 |
| 2. திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை இல.I | ரூபா 136500.00 |
| 3. திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை இல.II | ரூபா 136500.00 |
| கொக்குவில் உப அலுவலகம் | |
| 1. கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை (துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையத்துடன்) | ரூபா 204780.00 |
| 2. கொக்குவில் சந்தை மாட்டிறைச்சிக்கடை | ரூபா 194906.00 |
| 3. கொக்குவில் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | ரூபா 160545.00 |
| 4. கொக்குவில் உப அலுவலக மாட்டிறைச்சிக்கடை | ரூபா 286650.00 |

*கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி:* 27.11.2006 திங்கள் நண்பகல் 12 மணிவரை
*கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி:* 28.11.2006 செவ்வாய் நண்பகல் 12 மணிவரை
*கேள்வி திறக்கும் திகதி:* 28.11.2006 செவ்வாய் பிற்பகல் 2 மணி

மேற்படி கேள்விகள் தொடர்பான மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
17.11.2006 (51372)

பொன்னையா பூவைரமுத்து
*செயலாளர்,*
*நல்லூர் பிரதேச சபை.*

# WORLD RECOGNIZED DEGREES




71 சிறப்பம்சங்கள்: தகவல் தொடர்பு தொழில்நுட்பம் மற்றும் இயந்திர மனிதவியல், மோட்டார் வாகனப் பொறியியல் இயந்திர தொழில்நுட்பம், தொலைபேசி அமைப்பியல், போக்குவரவு பொறியியல், சிவில் மற்றும் இயந்திர பொறியியல், சந்தைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவம், கட்டடக் கலை, சர்வதேச உறவுகள் ஆகியவை உள்ளடங்கும்.

## தேசிய மருத்துவ - பல்கலைக்கழகம்-பெலாரஸ்

கிழக்கு ஐரோப்பாவில் உலகத் தரத்திலான கல்வியை அனுபவியுங்கள் - பெலாரஸ் ஒரு பல்லினங்களை கொண்ட நாடு ஜேர்மனி, போலந்து, அஸ்ரியா ஆகியவைகளால் சூழப்பட்ட ஐரோப்பிய கலாசாரங்கள் தோய்ந்த வளம் மிக்க பாரம்பரியங்கள் தொழில்நுட்பங்கள் நிறைந்தது.
84 நாடுகளுக்கு மேற்பட்ட நாடுகளின் வெளிநாட்டு மாணவர்களுடன் வெவ்வேறு வாழ்க்கை முறைகளையும் அனுபவங்களையும் பகிர்ந்துகொள்ளுங்கள். ஏற்கனவே கற்றுக்கொண்டிருக்கும் - மற்றும் உலகம் முழுவதிலும் உயர் வரிசைகளில் தொழில்புரியும் இலங்கையர்களான நூற்றிற்கு மேற்பட்ட பட்டதாரிகளைச் சந்திக்கலாம்.

- ★ *பட்டம் பெற்றதன் பின்னர் ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கு இடம்பெயரலாம்.*
- ★ *உள்வாங்கலும் & விசா உத்தரவாதம் (நேர்காணல், அனுசரணை அல்லது வங்கிஅறிக்கைகள் தேவையில்லை)*
- ★ *உள்வாங்கல் முடிவு 30 நவம்பர் 2006*
- ★ *சாதாரண தரம் / உயர்தரப் பெறுபேறுகளுடன் விண்ணபிக்கவும்.*

இன்று விண்ணப்பித்து - அடுத்தவாரம் புறப்படுங்கள்
அனுமதிக்கான தொடர்புகளுக்கு: 0773017883

**PATHE ACADEMY**
Overseas Students Placement department
No.37, School Lane,(Entrance Duplication Rd) Colombo 03
Tel: 5377752, 2502012,2591271

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்




### செல்வி தர்மலிங்கம் அனித்தா

கோப்பாய் கிறிஸ்டியன் பாடசாலையின் பழைய மாணவி

| அன்னையின் மடியில் | அரன் அடியில் |
|---|---|
| 29/10/1978 | 19/10/2006 |
| (கோப்பாய் தெற்கு) | (கொழும்பு) |

கடந்த 19/10/2006 அன்று இறைபதம் எய்திய எமது அன்புக்கும், பாசத்துக்கும் உரிய கடைக்குட்டி செல்வி அனித்தாவின் மறைவுச் செய்தி கேட்டு நேரில் சமுகமளித்தவர்களுக்கும் இறுதிக் கிரிகைகளில் கலந்துகொண்டவர்களுக்கும் உள்ளூர், வெளிநாடுகளிலிருந்து அனுதாபச் செய்திகள் அனுப்பி வைத்தவர்களுக்கும், உறவுகளின் இல்லங்களுக்குச் சென்று அனுதாபத்தையும், ஆறுதலையும் தெரிவித்துக்கொண்டோருக்கும் மற்றும் அனைத்து வகையிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். வீட்டுக்கிரியை 18/11/ 2006 சனிக்கிழமை அன்று எமது இல்லத்தில் நடைபெற்று 19.11.2006 ஞாயிற்றுக்கிழமை (இன்று) காலை 11 மணிக்கு பம்பலப்பிட்டியிலுள்ள அரசாங்க தொடர்மாடி மனையுடன் அமைந்துள்ள (Community Centre) மண்டபத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**T.P.: 0714086475 / 2723118**
**97A 1/1, Abeyesekara Road,**
**Off Wattarapola Road, Mount Lavania.**

தகவல்:
தாய், தந்தை,
சகோதரம்.
(சி/51354)

### பண்ணிசை வகுப்பு

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் இளவாலை, ஒல்லுடை அறநெறிப் பாடசாலையில் இலவச பண்ணிசை வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் இப் பண்ணிசை வகுப்புகளில் கலந்து கொள்கின்றனர். பண்ணிசை ஆசிரியை திருமதி மலர்விழி கனகசபை இந்தப் பண்ணிசை வகுப்பை நடத்தி வருகின்றார். (203-135)

### சித்தாந்த பண்டிதர் தேர்வுக்கு விண்ணப்பம்

யாழ். சைவ பரிபாலன சபை நடத்தும் 2007ஆம்ஆண்டுக்கான சித்தாந்த பாலபண்டிதர் மற்றும் சித்தாந்த பண்டிதர் ஆகிய பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை இம்மாதம் 30ஆம் திகதிக்குமுன்னர் நீராவியடியிலுள்ள யாழ். சைவ பரிபாலன சபை அலுவலகத்தில் பெற்று விண்ணப்பிக்கமுடியும் என்று பதில் தேர்வுச் செயலாளர் கலாபூஷணம் சு.செல்வத்துரை அறிவித்துள்ளார். (135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மைச் சிக்குன் குனியா வைரஸ் நோயிலிருந்து பாதுகாத்துக் கொள்ளச் செய்ய வேண்டியவை....

மலேரியா, பிலேரியா, டெங்கு, சிக்குன் குனியா போன்ற நோய்களையும் வேறு பல நோய்களையும் நுளம்புகள் பரப்புகின்றன. எமது நாட்டில் டெங்கு சில காலங்களாக இருந்துவருகின்றது. அண்மைக்காலமாக சிக்குன் குனியா அபாயம் தோன்றியுள்ளது. இதற்குக் காரணம் எமது. அயல் நாடான இந்தியாவில் இந்நோய் பெரும் எண்ணிக்கையான மக்களுக்கு பரவியுள்ளதேயாகும். இந்தியாவில் கடந்த ஆண்டில் மட்டும் சிக்குன் குனியாவினால் 1.25 மில்லியன் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் இருந்திருக்கின்றார்கள். இந்து சமுத்திரத்தில் உள்ள ஏனைய நாடுகளான மடகஸ்கார், சீசெல்ஸ், மொரிஸியஸ், மாலைதீவு போன்றவற்றிலும் சிக்குன் குனியாவினால் பாதிக்கப்பட்ட நூற்றுக்கணக்கான நோயாளர்கள் காணப்படுவதாக இவ்வாண்டுத் தொடக்கத்தில் இருந்து கண்டறியப்பட்டுள்ளது. இலங்கை இந்தியாவிற்கு மிக அண்மையில் அமைந்துள்ளமையினால், பிரதானமாக நாட்டின் வடபகுதி இந் நோய்த்தாக்கத்திற்கு இலகுவில் உள்ளாகலாம் என அஞ்சப்படுகின்றது.

**அறிகுறிகளுக்கான சிகிச்சைகள் மட்டுமே உள்ளன**

மன்னாரின் சில பகுதிகளிலும் கிழக்கு மற்றும் தெற்கு மாகாணங்களிலும் சிக்குன் குனியாவிற்குரிய அறிகுறிகள் பல நோயாளர்களில் கண்டறியப்பட்டுள்ளன. ஆனால், அவர்கள் இந்நோய்த் தொற்றுக்குத்தான் ஆளாகியுள்ளனர் என இதுவரையும் உறுதிப்படுத்தப்படவில்லை.

டெங்கு, சிக்குன் குனியா ஆகிய இரு நோய்களும் ஈடிஸ் எஜிப்டி **(Aedes aegypti)** என்றழைக்கப்படும் ஓர் இன நுளம்புகளால் பரப்பப்படுகின்றன. சில நாடுகளில் ஈடிஸ் சப்பிக்டஸ் **(Aedes subpictus)** என்னும் ஒரு வகை நுளம்புகளும் இந் நோய்க்குக் காரணம் என்றும் கூறப்படுகின்றது. இந்த ஈடிஸ் எஜிப்டி **(Aedes aegypti)** இன நுளம்புகளை அவைகளின் உடலில் உள்ள புள்ளிகளைக்கொண்டு அடையாளம் கண்டுகொள்ளலாம். அத்துடன் அவை விடாமல் திருப்பித் திருப்பிக் கடிக்கக்கூடியவை.

டெங்கு, சிக்குன் குனியா நோய்கள் ஒரே மாதிரியான அறிகுறிகளைக் கொண்டவையாகவே இருக்கும். அவையாவன: உயர் காய்ச்சல், உடல் வலியும் நோவும், எலும்பு நோ அல்லது மூட்டு நோ, கண்களுக்குப் பின்பகுதியில் நோ என்பன தோன்றலாம்.

## நுளம்புகளின் பெருக்கத்தைக் குறைப்பதே ஒரே வழி

டெங்கு காய்ச்சலைத் தொடர்ந்து டெங்கு இரத்தக்கசிவுடன் கூடிய காய்ச்சலாக **(Dengue Haemorrhagic Fever)** மாறி இரத்தப்பெருக்கு அல்லது இறப்பிற்கு இட டுச்செல்லலாம். சிக்குன் குனியா மூட்டுக்களில் கழுத்தைச் சுற்றியுள்ள சுரப்பிகளில் அதிகளவு வீக்கத்தையும் ஏற்படுத்தக்கூடியது.

இந்நோயின் தாக்கம் பெரும்பாலாக வைகாசி -ஆடி மற்றும் ஐப்பசி - மார்கழி மாதங்களிலேயே அதிகமாகக் காணப்படும்.

டெங்கு மற்றும் சிக்குன் குனியா நோய்களுக்குக் குறிப்பிட்டு கூறக்கூடிய சிகிச்சைகள் இல்லை. தற்போது, அறிகுறிகளுக்கான சிகிச்சைகள் மட்டுமே பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது. ஆகவே, நோய் வருமுன் காப்பதே எமக்குள்ள ஒரே வழி. நோயிலிருந்து பாதுகாத்தல் என்பது எமது சுற்றுப்புறங்களில் உள்ள நுளம்புகளின் எண்ணிக்கையைக் குறைத்தலிலும் நுளம்புகள் கடித்தலைக் கட்டுப்படுத்துதலிலும் தங்கியுள்ளது.


**எமது சுற்றுப்புறச்சூழலில் நுளம்புகள் பெருகும் இடங்கள்**

நுளம்புகளில் பல நுற்றுக்கணக்கான இனங்கள் உண்டு. அனைத்துமே தம் முட்டைகளை நீரில் இடுகின்றன. முட்டைகள் பொரித்து குடம்பிகளாகிப் பின் புழுக்களாக வெளிவந்து 7-10 நாள்களில் முதிர்ந்த நுளம்புகளாக வளர்ச்சியடைகின்றன. ஆனால், நுளம்புகளின் இனங்களுக்கு ஏற்றவாறு அவை முட்டையிடும் நீரும் வேறுபடும்.

ஈடிஸ் எஜிப்டி இன நுளம்புகள் சிறிய அளவில் சேர்ந்திருக்கும் நீரிலேயே தம் முட்டைகளை இடும். பொலித்தின் பைகள், தகரப் பேணிகள், தேங்காய்ச் சிரட்டைகள், கொள்கலன்கள், பாவனைக்குதவாத கைவிடப்பட்ட ரயர்கள், சிறிய கழிவுநீர்த் தேக்கங்கள், நீர் சேமிக்கும் பாத்திரங்கள், மீன்கள் அற்ற மீன் தொட்டிகள், நீருள்ள பூச்சாடிகள், மலசலகூட நீரடைப்புக்கள் போன்றவற்றில் சிறிய அளவில் சேர்ந்திருக்கும் நீரில் இடப்படும் முட்டையில் இருந்து இவ்வகை நுளம்புகள் உருவாகின்றன.



ஈடிஸ் எஜிப்ட்டி நுளம்பு இது.



ஈடிஸ் எஜிப்டி நுளம்புகள் பெருகும் இடங்கள்

**நுளம்புகளின் பெருக்கத்தை கட்டுப்படுத்துவது எப்படி?**

நுளம்புகள் உற்பத்தியாகி வளரும் இடங்களை அகற்றுதல், அழித்தலின் மூலம் இவற்றின் பெருக்கத்தை கட்டுப்படுத்தலாம். மழைகாலம் ஆரம்பிப்பதற்கு முன் தேவையற்ற சிறிய கொள்கலன்களைப் புதைத்தல், அழித்தல், கழிவுநீர்த் தேக்கங்களை துப்புரவு செய்தல் அவசியம். மீன்கள் அற்ற மீன் தொட்டிகள் வெறுமையாக்கப்படவேண்டும். தேங்காய்ச் சிரட்டைகளில் நீர் தேங்கி நிற்காத வகையில் சேகரித்து களஞ்சியப் படுத்தி வைக்க வேண்டும். நீர் சேகரிப்புக்குப் பயன்படுத்தப்படும் பாத்திரங்கள், நீர்த் தாங்கிகள் என்பன அடிக்கடி வெறுமையாக்கப்பட்டு மீண்டும் நிரப்பப்படவேண்டும். குளிர்சாதனப் பெட்டியின் அடியில் காணப்படும் நீரைச் சேகரிக்கும் தட்டுக்களும் நுளம்புகள் வளர உகந்த இடங்களாகும்.

வைத்திய கலாநிதி
ந.சிவராஜா

வீடுகளில் நீர் சேகரிப்புக்குப் பயன்படுத்தப்படும் பாத்திரங்கள் வெறுமையாக்கப்படும்போது அதன் உட்பக்க சுவரினை நன்கு தேய்த்துத் தூய்மையாக்குவதன் மூலம் அதன் உட்சுவரில் ஒட்டிக்கொண்டிருக்கும் முட்டைகளை அகற்றலாம்.

எறும்பு மேசைகளில் ஏறாதிருக்க பாவிக்கும் பாத்திரங்களுக்கு **(Ant traps)** சவர்க்காரம் அல்லது உப்பு சேர்க்கப்படவேண்டும். வீட்டுக் கூரையில் உள்ள தகரங்கள் காற்றால் அகற்றப்படாதிருக்க வைக்கப்படும் ரயர்கள் கட்டாயமாக மண்ணினால் நிரப்பப்படவேண்டும்.

( ஆம் பக்கம் பார்க்க)


---

# முள் முருங்கைக்குப் பதிலாக கிளிறிசிடியா நாட்டலாம்

**முள்முருங்கையில் முடிச்சுக்குளவி என்ற புதிய நோய் ஒன்று தொற்றிப் பரவிவருவதாலும் அது ஏனைய பயன்தரும் மரங்களுக்கும் தொற்றலாம் என்ற அச்சம் தோன்றத் தொடங்கியிருப்பதாலும் அம்மரத்துக்குப் பதிலாக கிளிறிசிடியா (சீமைக்கிளுவை) பயன்தரும் மரத்தைப் பயிரிடலாம் என்கிறார் கட்டுரையாளர்.**

இற்றைக்கு ஏழு மாதங்கள்!

26.03.2006 இல் உதயனில் 'முள்முருங்கையில் முடிச்சுக் குளவி' என்ற தலைப்பில் முடிச்சுக் குளவி பற்றியும் அதன் தாக்கத்தைப் பற்றியும் விலாவாரியாக விளக்கியிருந்தோம். இப்போது குடாநாட்டில் அனைவரும் முணுமுணுக்கத் தொடங்கியிருப்பதன் மூலம் இக் குளவியின் தாக்கத்தை அனைவரும் அறியத்தொடங்கிவிட்டார்கள். அவ்வளவுக்கு வேகமாகப் பரவிக்கொண்டு போகிறது 'முடிச்சுக் குளவி'.



தாக்கத்திற்குள்ளான முள்முருங்கை மரம்.

ஹவாய் தீவுகளிலிருந்து வந்தேறிய குடிதானே என அனுமானிக்க முடிந்தபோதும் எமது நாட்டினுள் வந்தேறிய பாதையைக் கண்டறிவது கடினமாகவே உள்ளது. திருகோணமலை, வவுனியா, கிளிநொச்சி, பளை, யாழ்ப்பாணம் என வடக்கு நோக்கிய பரவலாக இருப்பினும், தென்பகுதியில் வவுனியா, கொழும்பு பாதையினூடாகப் பயணிக்கும் போது அனைத்துப் பகுதிகளிலும் காணப்படும் முள்முருங்கைகளில் முடிச்சுக்குளவியின் தாக்கம் பரவியுள்ளமையை அவதானிக்கலாம்.

குடாநாட்டிலுள்ள முள்முருங்கைகள் எதனையும் விட்டுவைப்பதில்லை என்ற இறுமாப்புடன் வேகமாகப் பரவுகின்றது இக் குளவி. அநேகமான இடங்களில் முள்முருக்கம் மரத்தைக் கத்தரித்து விட்டிருப்பதனை அவதானிக்கலாம். கத்தரித்த மரத்திலிருந்து விரைந்து உயிர்ப்புப் பெறும் புதிய அரும்புகளில் முடிச்சுக்குளவிகள் ஒன்றாகப் படையெடுத்து தமது இனத்தைப் பரப்புவதற்கு விரைவதால் அனைத்து அரும்புகளிலும் முடிச்சுக்களே[illegible] மரமே காய்ந்துபோவதை அவதானிக்கலாம்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் நல்லூரப் பிரதேச பகுதிகளில் ஆரம்பத்தில் அவதானிக்கப்பட்ட இம்முடிச்சுக்குளவியின் தாக்கம் கோப்பாய், கோண்டாவில், நீர்வேலி, சுன்னாகம் மற்றும் வடமராட்சிப் பகுதிகளுக்கும் பரவியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. குளவித் தாக்கத்திற்குள்ளான முள் முருங்கையினது இலைகளில் ஒருவித சிற்றுண்ணி **(Mite)** இனது தாக்கமும் அவதானிக்கப்பட்டுள்ளது.

## முடிச்சுக்குளவி நோயின் தாக்கத்திலிருந்து விடுபட மாற்றுவழி இது

**பிற பயிர்களில் முழச்சுக்குளவியின் தாக்கமா?**

வெற்றிலைக் கொடி பற்றியேறுவதற்கான மரமாக முள்முருங்கை பயன்படுத்தப்பட்டு வந்தபோதிலும் இம்முடிச்சுக்குளவியின் அதிகரித்த பரவல் காரணமாகவும் அதிகளவிலான முடிச்சுக்களை ஏற்படுத்தும் வீரியத்தன்மை காரணமாகவும் இக்குளவியின் தாக்கம் ஏனைய பயிர்களிலும் காணமுடிவதாக சில விவசாயிகள் கூறுகின்றனர். வெற்றிலையிலும் தக்காளிப்பழங்களிலும் முடிச்சுக்குளவியின் தாக்கம் இருப்பதாக சிலர் சந்தேகிக்கின்ற போதிலும் இக்கருத்துகளின் உண்மை நிலையை ஆய்வுமூலம் கண்டறிய போதியளவு ஆதாரங்கள் கிடைக்கவில்லை. இதுபற்றி தங்களது பயிர்களில் ஏதும் முடிச்சு போன்ற தாக்கத்தை அவதானித்தால் உடனடியாக விவசாய உயிரியல் துறை, விவசாய பீடம் என்ற முகவரிக்கு அறியத்தாருங்கள். விளைவு விபரீதமாவதற்குள் பரிகரணம் காணவேண்டும்.


கலாநிதி கு.மிகுந்தன்
தகவல் தொடர்பு மையம், விவசாயபீடம்

**கட்டுப்பாட்டு முறைகள் இன்னும் இல்லை**

முடிச்சுக்குளவியின் சேதத்தின் வலிமையை உணர்ந்த நாடுகளில்கூட இதற்கான சிறந்த கட்டுப்பாட்டு முறைகள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. ஆய்வுகள் அங்கும் இங்கும் நடைபெறுகின்றன. கட்டுப்பாட்டு முறைகளை விரைந்து அனைவருக்கும் தெரிவிக்கவேண்டிய தருணம் இது.

**வெற்றிலை பற்றி ஏற கிளிறிசிடியா**

முடிச்சுக்குளவியின் தாக்கம் மற்றும் பரவலைக் குறைக்கவும் முள்முருங்கைக்கு மாற்றீடாகவும் கிளிறிசிடியாவைப் பயன்படுத்தலாம். கிளிற்சிடியா ஒரு பல்பயன்தரு மரங்களுள் ஒன்று. உயிர் எரிபொருளாகவும் **(Biofuel)** சிறந்த பசுந்தாள் பசளையாகவும் பயன்படுகிறது. வேலிகளில் நடுவதற்கும் கால்நடைத்தீவனமாகவும் பயன்படுத்தப்படுகிறது. மண்ணினுள் தழைச்சத்தை பதிக்கும் தன்மை மூலம் மண்வளத்தை பெருக்கவும் பயன்படுகிறது. முடிச்சுக்குளவியின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த, பரவும் வீதத்தை குறைத்திட முள்முருக்கத்திற்குப் பதிலாக கிளிறிசிடியாவைப் பயன்படுத்தலாம். நாம் எல்லோரும் இணைந்து பாதீனியம் என்ற களையைக் கட்டுப்படுத்த எங்ஙனம் முயற்சித்தோமோ அதுபோல முடிச்சுக்குளவியையும் விரைந்து கட்டுப்படுத்த வேண்டும்.



கிளிறி [சீமைக்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடனடி வேலை வாய்ப்பு

டோகா, கட்டார், டுபாய்
துப்புரவுத் தொழிலாளர்கள் (Cleaning Laborer)
(விமான நிலையம், சுப்பமார்க்கட், ஆஸ்பத்திரி, பல்கலைக் கழகம் ஆகிய இடங்களில்)
★ முன்னனுபவம், அனுபவம் தேவையில்லை
ஒரு மாதத்தில் பயணம்

**யாழ். கொழும்பு விமான ரிக்கற்றுக்கள்**

கொழும்பு - யாழ்.
யாழ். - கொழும்பு
விமான ரிக்கற்றுக்கள் எம்மிடம்பெற்றுக்கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு:
RAINBOW TRAVELS & TOURS
32, 1/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.: 222 3237
0115371629
0777535988 } கொழும்பு (சி-51378)


# பதினோராம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
26★11★1928

உதிர்வு
08★11★1995



அமரர்
இரத்தினம் சுந்தரலிங்கம்

எம் குடும்ப குல விளக்காக நீர் வாழ்ந்தீர்!
எம்மை விட்டுப் பிரிந்து நீர் எங்கு சென்றீர்!
ஆண்டுகள் பதினொன்று சென்றிடினும்
எம்முடன் எப்போதும் நீர் வாழ்வீர்!

'லிங்கவாசம்'
மானிப்பாய் வீதி,
தாவடி, கொக்குவில். (55349) -குடும்பத்தினர்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலைப்பீட அருங்காட்சியகம்

அரும்பொருள்கள் மற்றும் மரபுரிமைச் சொத்துக்கள் சேகரிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடம், தனது அருங் காட்சியகத்தினை விரிவாக்கம் செய்தலின் ஒரு பகுதியாக அரும் பொருள்களை சேகரிப்பதற்கான நடவடிக்கைகளை ஆரம்பித் துள்ளது. இதன் பொருட்டு, அரும்பொருள்கள் மற்றும் மரபுரிமைச் சொத்துக்களைப் பொதுமக்களிடமிருந்தும், தற்போது தம்மிடமுள்ள மரபுரிமைச்சொத்துக்களைப் பராமரிக்கமுடியாத ஆர்வலர்களிட மிருந்தும், அன்பளிப்பாகவோ அல்லது தற்காலிக/நிரந்தர ஒப்பந்த அடிப்படையிலோ அல்லது கொள்வனவாகவோ பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட வகையில் பல்கலைக்கழக கலைப்பீட அருங்காட்சி யகத்துக்குப் பங்களிப்புச் செய்ய ஆர்வமுள்ளோர் தங்களிடமுள்ள அரும்பொருள்கள் பற்றிய விபரங்களையும் மற்றும் தொடர்பு கொள்வதற்கான முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றை யும் **சிரேஷ்ட உதவிப்பதிவாளர், கலைப்பீடம் யாழ்ப்பாணப் பல் கலைக்கழகம்** எனும் முகவரிக்கு அனுப்பியுதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். (c/51355)

# மரண அறிவித்தல்

## திருமதி குமாரசாமி செல்வநாயகி

(சித்தன்கேணி)



சித்தன்கேணியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி குமாரசாமி செல்வநாயகி நேற்று (18.11.2006) சனிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிர மணியம்-பொன்னம்மா தம்பதியினின் அன்பு மகளும் மாரிமுத்து- தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் குமாரசாமியின் அன்பு மனைவியும் பங்கயவல்லி (டென்மார்க்), காலஞ்சென்ற கருணாகரன், கோகுலராணி (ஆசிரியை - பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி), சிவகணேசன் (முன்னாள் பனை அபிவிருத்தி சபை உத் தியோகத்தர் - கனடா), அருந்தவச்செல்வி (லண்டன் - முன்னாள் டாக்டர் - யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயும் கோபாலசிங்கம் (டென்மார்க்), சிறீகரன் (வட்டு-கிழக்கு கிராம சேவையாளர்), கமலா (கனடா), சந்திரமௌன்சன் (லண் டன்) ஆகியோரின் அன்பு மாமியும் நிகோபன், கோபனா, லோசிகா, குகன், புனிதவேல் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ் சென்ற பரமசிவம், அருளம்பலம் சிவபாக்கியம் மற்றும் கார்த்தி கேசு கணபதிப்பிள்ளை, மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (19.11.2006) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கை ஆறு மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளையார் கோயிலடி, மக்கள், மருமக்கள்,
சித்தன்கேணி. (சி-51383) பேரப்பிள்ளைகள்.

# தவறிவிட்டது

செல்வி திருபாராஜா லில்லி மிறிற்றா தேசமலர் என்பரு டைய தேசிய அடையாள அட்டையும் பணப்பையும் சிறு தொகையுடன் யாழ்.பிரதான வீதிக்கும் யாழ். பேருந்து நிலை யத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கதி யட் வின்சிலோ மகளிர் இல்லம், பண்டத்தரிப்பில் ஒப்படைத்து உதவவும். (55408)

# மணமகன் தேவை

யாழ். இந்து வயது 30 உயரம் 5' 3" B.A. பட்டதாரி, சாதி, சமயம் மற்றும் பிர தேச வேறுபாடுகள் தடையாக இருக்காது. வீட்டுடன் சீதனம் உண்டு

தொடர்புகளுக்கு: ஆனந்தம் 0716108246

# கண்ணீர் அஞ்சலி

## கந்தையா அசுபதி

(முன்னாள் இ.போ.ச.சாரதி)

கடந்த 19.09.2006 இல் டோகா கட்டாரில் காலமான அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி யடைய இறைவனை வேண்டுகிறோம்.

(55405) பாரதி சனசமூக நிலையம், மானிப்பாய் கிழக்கு.

# கண்ணீர் அஞ்சலி



தீவக அரிமாக்கழகத்தின் தலைவர் லயன் கு.கங்கைவேணியன் J.P. (வேணி களஞ்சியம்) அவர்களின் மாமனாரும் லயன் சிமாட்டி வாசுகி அவர்களின் தந்தை யுமான வேலணை மேற்கைச் சேர்ந்த

அமரர்

## கணபதிப்பிள்ளை விசுவநாதன்

அவர்கள் 16.11.2006 வியாழக்கிழமை அகாலமரணமாகி இன்று (19.11.2006) கொழும்பில் இறுதிக்கிரியைகள் நடை பெறுகின்ற வேளையில் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்ப உறவுகளுக்கு நமது மெதுமனம் நெகிழ்ந்த அஞ்சலியைச் செலுத்துகின்றோம்.

(55305) தீவக அரிமாக்கழகம், ஊர்காவற்றுறை.

# மரண அறிவித்தல்கள்

## நகுலேஸ்வரன் அன்பரசன்



பங்களா லேன், மல்லாகத்தைப் பிறப் பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட நகுலேஸ்வரன் அன் பரசன் நேற்றுக் காலை (18.11.2006) அகால மரணமானார்.

அன்னாரின் இறு திக்கிரியைகள் கடவைப்புலம், சுன்னா கத்தில் உள்ள தற்காலிக முகவரியில் இன்று மதியம் 12 மணியளவில் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உற வினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
(55406) பூ.நகுலேஸ்வரன் (தந்தை)

## பரநிருபசிங்கம் கனகரெத்தினம்

புங்குடுதீவு 8 ஆம் வட்டாரத்தைப் பிறப் பிடமாகவும் தேவிபுரத்தை வசிப்பிடமாக வும் கொண்ட பரநிருபசிங்கம் கனகரெத்தி னம் நேற்று(18.11.2006)சனிக்கிழமை சிவ பதமடைந்தார்.

அன்னார் பரநிருபசிங்கம் - தையல் முத்து தம்பதியரின் அன்பு மகனும் நாக சுப்பிள்ளையின் பெறாமகனும் செல்லப்பா - வள்ளியம்மை தம்பதியரின் மருமகனும் கமலாம்பிகையின் அன்புக் கணவரும் பத் மாவதி, சூரியகுமாரி, சிவராசா கமலநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காசிலிங் கம், சிவபாதம், விஜி, ஜெயசித்திரா ஆகி யோரின் மாமனும் காலஞ்சென்ற சிவ காமிப்பிள்ளை, நாகமுத்து, காலஞ்சென்ற வர்களான பாலசுப்பிரமணியம் (ரைக்ரர் பாலா), தில்லையம்மா, தர்மலிங்கம் ஆகி யோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தேவி புரத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

159, தேவிபுரம், நகன்முகநா தன்,ந.சோமசுந்தரம்
புதுக்குடியிருப்பு. (மருமக்கள்)

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா செல்வராசா (சாரதி)



தெல்லிப்பழை, செருக்கம்புலத்தினை பிறப் பிடமாகவும் இணுவில் தெற்கு, இணுவிலை வதி விடமாகவும் கொண்ட செல்லையா செல்வராசா நேற்று (18.11.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தவமணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்லையா - பொன்னு தம்பதி யரின் அன்பு மகனும் மனோரஞ்சினி, பராசக்தி, நகுலேஸ்வரன் (லண்டன்), நகுலேஸ்வரி (கொழும்பு), பானுமதி (பிரான்ஸ்), நாகராஜா (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும் விக்னராஜா (விக்னா சவுண்ஸ், இணுவில்), சிவானந்தம், சபிலா (லண்டன்), ராஜேந்திரன் (கொழும்பு), பாஸ்கரன் (பிரான்ஸ்), குமுதினி (கொழும்பு) ஆகி யோரின் அன்பு மாமனும் காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணி யம், சிவகாமிப்பிள்ளை மற்றும் பார்வதிப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான தியாகராசா, சிவசுப்பிரமணி யம் மற்றும் சிவபாக்கியம் (டென்மார்க்) ஆகியோரின் மைத்துன ரும் ராஜமோகன், சிவமோகன் (பெல்ஜியம்), ஜனமோகன், ரஜித்தா, டினோஜன், சோபனா, ராகுலன், விஜபாலன், காலஞ்சென்ற பாமினி, பாமதி, குசாந்தன், தனோஜன், மனோஜன், ஹரிகரன், வினிசன், டிலக் சன், தக்சாயினி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2006) ஞாயிற் றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இணுவிலில் நடைபெற்று, பூதவு டல் தாவடி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இணுவில் தெற்கு, இணுவில். (55348) பிள்ளைகள்.

## கதிரவேலு சபாபதிப்பிள்ளை



பாடசாலை ஒழுங்கை, மல்லாகத்தைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிர வேலு சபாபதிப்பிள்ளை நேற்று (18.11.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு -பரி பூரணம் தம்பதியரின் அன்பு மகனும் அருளா னந்தம்(அம்பலவாணர்) சச்சிதானந்தம், காலஞ் சென்றவர்களான சதாசிவம், விக்கி னேஸ் வரன், செல்வராணி, சொக்கநாதன் ஆகியோ ரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற அகிலேஸ்வரன், சிவ னேஸ்வரி, தேவமனோகரி ஆகியோரின் மைத்துனரும் சிவரூபன், பகீரதி ஆகியோரின் மாமனும் சிவகௌரி, ஜிகான், ராஜி ஆகி யோரின் சிறிய தந்தையும் கோபிகா, பிரியங்கா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2006) ஞாயிற் றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பாடசாலை ஒழுங்கை, அருளானந்தம் (வாணர்),
மல்லாகம். (55409) சகோதரன்.

## திருமதி மகேஸ்வரி சின்னத்துரை



இணுவில் கிழக்கு, அண்ணமார் கோயில டியை சேர்ந்த திருமதி மகேஸ்வரி சின் னத்துரை நேற்று (18.11.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரையின் அன்பு மனைவியும் சிவலிங்கம்(சிவன் ஸ்ரோஸ், ஒட்டுசுட்டான்), மகேஸ்வரன், (வர்த்தகர், மரு தனார்மடம்), யோகராணி, சோதிலிங்கம்(பிர திஅதிபர், இணுவில் இந்துக் கல்லூரி), சச்சி தானந்தம்(ஜேர்மனி), விக்கினேஸ்வரன்(ஜேர்மனி), விமலேஸ் வரி ஆகியோரின் அன்புத் தாயும்அன்னலட்சுமி, கமலாதேவி,ந டேசமூர்த்தி, தேன்மொழி, இராசலட் சுமி, இராசகுமாரி, சிவகுமாரன் ஆகியோரின் மாமியும் சிவகரன், சிவஜனி, சிவகஜன், மதனராஜி, மதிஜெனன், மதிவரன், நவீந்தினி, யோகரூபன், நவநீசன், யோகதீசி, கோகிலன், இராகுலன், யதுகுலன், அகிலா, வரகுலன், கபிலினி, கபிலினன், பிரதீபனா, பிரசாமந்தன், பிர சங்கவி, சிவஜீதா,சிவசஜீதரன்,சிவஜீபன் ஆகியோரின் பேர்த் தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(19.11.2006) ஞாயிற் றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்துமயானத் திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இணுவில் கிழக்கு. (55407) சி.சோதிலிங்கம் (மகன்).

## திருமதி கந்தையா இராசம்மா

வட்டுக்கோட்டை மேற்கைப் பிறப்பிடமாகவும் முன்னாள் மலே சியாவையும் வட்டு-கிழக்கு தாவளையையும், தற்போது கொ ழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா இராசம் மா நேற்று (18.11.2006) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் கந்தையாவின் (மலாயன் பென்சனியர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மேஜர் இரத்தினம், இராசரத்தினம்(நிலஅளவையாளர்), குணரத்தினம்(சட் டத்தரணி)மற்றும் நவரத்தினம் (நீதிமன்ற விற்பனையாளரும் விலைமதிப்பாளரும்) ஆகியோரின் பாசமிகு தாயும் ஜெயலஷ்மி, ஜெயலஷ்மி(நேசம்), தயாவதனி, சிவனேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும் கனடாவில் வசிக்கும் ஜீவகன், குமரன்,நிமலன், சத்தி யன், மீனா, சேந்தன், தயாளன், லஷ்மன், தக்ஷாயினி(ஆஸ்திரே லியா), சஜீவன்(பிரித்தானியா உயர்ஸ்தானிகராலயம், கொழும்பு), ரமணன்(லண்டன்), பிரிந்தா மற்றும் கனடாவிலுள்ள மரியா, தீபா, குகன், ஆறுமுகதாசன், கவிதா, பார்த்தீபன்(ஆஸ்திரேலியா) ஆகி யோரின் அன்புப் பேர்த்தியும் வித்தியா, யாதவன், கண்ணன், சேரன், கீர்த்தனா, கீர்த்திகா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(19.11.2006) ஞாயிற் றுக்கிழமை காலை 7.30 மணியளவில் 5/9, பாத்திபா றோட், நார ஹேன்பிட்டியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 10 மணியளவில் பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
5/9, பாத்திபா றோட், நவரத்தினம் (மகன்).
நாராஹேன்பிட்டி (சி-51380)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செல்வச்சந்நிதியில் திருக்கல்யாணம்

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் முருகப் பெருமான் வள்ளியம்மை திருக்கல்யாணம் எதிர்வரும் 23ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. காலை வள்ளியம்மை திருமண படனப்படிப்புடன் திருவிழா ஆரம்பமாகி நண்பகல் 12.30 மணியளவில் திருக்கல்யாணம் இடம்பெற்று தொடர்ந்து கந்தபுராண படன படிப்பு இடம்பெற்று திருவிழா நிறைவடையும். (203)

## சேவை நலன்பாராட்டு



யா/மல்லாகம் மகா வித்தியாலய உப அதிபர்

**திருமதி பு.மாணிக்கவாசகர் (S.L.T.S.I)**

எமது பாடசாலையில் ஆங்கில ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவும் உப அதிபராகவும் 21 வருடங்கள் சேவையாற்றிய அவர்கள் தனது 39 வருட 19 நாள்கள் ஆசிரிய சேவையில் இருந்து இன்று 19.11.2006 ஓய்வுபெறுகின்றார். அவர்கள் எமது பாடசாலைக்கு ஆற்றிய சேவைகளை மனமாரப் பாராட்டுவதோடு; தனது ஓய்வுக்காலத்தில் சகல செல்வங்களும் பெற்று குடும்பத்தினருடன் ஆரோக்கியமாகவும் நீண்ட ஆயுளுடனும் வாழ மல்லை பழம்பதி விநாயகனை வேண்டி வாழ்த்துகின்றோம். (55289)

**ஆசிரியர் நலன்புரிக்கழகம், மாணவர்கள்.**

## 90ஆம் நாள் நினைவலைகள்



திருமதி
**வதனா அற்புதராசா**

மொட்டாக 07✱09✱1973 உதிர்வாக 22✱08✱2006

அன்பைச் சொரிந்து
பண்பை வளர்த்து
முயற்சி எனும் காற்றை
முழுநாளும் சுவாசித்து
உலகில் நாம் உயர நல்வழி
காட்டிய அன்புத் தெய்வமே
ஒருபோதும் மறவோம் உன்னை
என்றும் உன் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

விக்னேஸ்வரா வீதி,
கரவெட்டி மேற்கு, நெல்லியடி. (55342)

**உ.ரமணன்.**

Rs.400

SLT MAXtalk

**AVILABLE AT:**
**SRI MURUGAN TELE COMMUNICATION & AGENCY POST OFFICE**
303, K.K.S. ROAD, JAFFNA.
T.P.: 021 2670, 3214
FAX: 021 3214
(55345)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம் சிவசுப்பிரமணியம்



கொக்குவில், தலையாளியைப் பிறப்பிடமாகவும் **Sydney, Australia** வை வதிவிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியை திருமதி செல்லம் சிவசுப்பிரமணியம் (பெரியக்கா ரீச்சர்) 10.11.2006 அன்று வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய ஆசிரியர் சிவகுருநாதர் சிவசுப்பிரமணியத்தின் அருமை மனைவியும் சிவநேசராஜசிங்கம் (**Australia**), காலஞ்சென்ற சிவானந்தராஜசிங்கம், மகாதேவி அம்மையார் (**Australia**), சிவஞானராஜசிங்கம் (**France**), சிவயோகராஜசிங்கம்(**Malaysia**), சிவசொரூபராஜசிங்கம் (**U.K.**), உமாதேவி அம்மையார் (**Australia**), சத்தியதேவி அம்மையார் (**France**) ஆகியோரின் அன்புத் தாயும் கிருஸ்ண வேணி (**Australia**), கமலாதேவி (**Australia**), பாண்டுரங்கன் (**Australia**), ஜெகதாம்பாள் (**France**), மணி மேகலை (**Australia**), அகிலா (**U.K.**), ஆதீஸ்வரன் (**Australia**), சுந்தரலிங்கம் (**France**) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.11.2006 திங்கட்கிழமையன்று **Sydney, Australia**வில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**தொலைபேசி இல.: 0061297151447**

தகவல்: **Dr.A.பாண்டுரங்கன்.**

**U.S. DEPARTMENT of STATE**

**D.V 2008 விண்ணப்பிக்கத் தவறியவர்களுக்கு**



*இன்னும் சில நாள்கள் மட்டுமே!*

55000 பேர் ஆண்டுதோறும் தெரிவு செய்யப்படும் அமெரிக்க விசாவுக்கு விண்ணப்பிக்காதோர் பாஸ்போட் அளவு கலர் புகைப்படத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும். விண்ணப்பப்படிவங்களை நேரில் பெற்றுக்கொண்டு விண்ணப்பத்துக்கான உறுதிப் பற்றுச்சீட்டினையும் உடன் பெற்றுக்கெள்ளலாம்.

**விண்ணப்பக்கட்டணம் 200ரூபா மட்டுமே**

**உங்களிடம் தொலைபேசி வசதி உள்ளதா?**



*குறைந்த கட்டணத்தில் IDD அழைப்புகளை மேற்கொள்ள விசேட சலுகைகள்.*
*கனடா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளுக்கு* **5/-**

**திருமுருகன் கொம் நெற்**
259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.: 222 7835
46,ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே.: 222 7310

**விற்பனைக்கு**

1. புத்தம்புதிய COMPAQ, TOSHIBA LAP TOPகணனிகள்
2. CANOPUS DV Storm XA(கப்சர் காட்)
3. Premium Photo Quality & Direct CD/DVD Printer
4. Power ACT PANAPHONE CLI தொலைபேசிகள்

அனைத்தும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**MUSIC WORLD**
141B , பலாலி வீதி,
திருநெல்வேலி. (55332)

## நெஞ்சைவிட்டு நீங்காத 100ஆவது நினைவு நாள்

மலர்வு 26 ★ 09 ★ 1983



உதிர்வு 12 ★ 08 ★ 2006

### செல்வி மேரி அன்ரனிற்றா அன்ரனியுஸ்

(யாழ். பல்கலைக்கழகக் கலைப்பிரிவு - 3ஆம் வருடம்)

*எம் ஆசை மகளே! நீர் எம்மை விட்டு மறைந்து நூறு நாள்கள் தான் கடந்ததம்மா. ஆனால் நூறு யுகங்கள் மறைந்தது போல் எம் இதயம் வாடுகின்றது. அப்பா, அம்மா என்ற உன் குரல் கேளாது காதுகள் கனக்கின்றன. உன் திருவதனம் காணாது கண்கள் பனிக்கின்றன. உம் முத்தம் கிடையாது எம் கன்னங்கள் காய்கின்றன. எம் அருகில் நீர் இருக்கும் பிரமையில் உன் பாதச்சுவடுகள் பதிந்த இடங்களைப் பார்த்துப் பதறுகின்றோம், பரிதவிக்கின்றோம்.*

**கல்லூரி வீதி,**
**இளவாலை.** (55275)

**திரு. திருமதி அன்ரனியுஸ் (பெற்றோர்).**

## மரண அறிவித்தல்கள்

### செல்வி கௌரி அம்மா பொன்னம்பலம்

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி கௌரி அம்மா நேற்று 18.11.2006 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலம் சென்றவர்களான திரு.திருமதி பொன்னம்பலம் - கண்மணி தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்றவர்களான சிவஞானவதி, இராசலிங்கம் ஆகியோரின் சகோதரியும் பரமேஸ்வரி (ஆசிரியை)யின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.11.2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் திருநெல்வேலியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**43, கலாசாலை வீதி,**
திருநெல்வேலி.
T.P.:222 7323

தகவல்: **இ.சிவநாதன்** (தம்பி). (55346)

### திருமதி சுந்தரம் செல்லம்மா



உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் ஊரெழு கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரம் செல்லம்மா 17.11.2006 அன்று காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ப.சுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான திருமதி தம்பு இராசம்மா, அப்பா தம்பித்துரை ஆகியோரின் சகோதரியும் மகானந்தன் (கனடா), சறோஜினிதேவி, நித்தியானந்தம் (பொறியிலாளர் - சிமெந்துக் கூட்டுத்தாபனம்), சிலோச்சனா, சகுந்தலாதேவி, சாந்தினிதேவி ஆகியோரின் பாசமிகு தாயும் பேரின்பநாயகி (கனடா), கிருஷ்ணபிள்ளை (விசேட ஆணையாளர், கரைதுறைப்பற்று பிரதேச சபை), டாக்டர் ஜானகி (உடுவில் அரசினர் வைத்தியசாலை), சிவகுரு (உதவிக் கணக்காய்வாளர் நாயகம், வடகிழக்கு மாகாணம்), பத்மநாதன் (கிளை முகாமையாளர், சுன்னாகம் ப.நோ.கூ.சங்கம்), மகேந்திரராஜா (தொழில்நுட்பவியலாளர், சிமெந்துக்கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்பு மாமியும் தேனகா (ஆசிரியை), சந்திரிக்கா (அமெரிக்கா), விஜிதா (உதவித் தபாலதிபர்), கஜன், அமரர் ஜெகன், ஜெய்கரன், சயனுதா, தனஞ்செயன், பிருந்தா (ஆசிரியை), யகோபன், பிரகாங்கனி, தினேஷ், லாவண்யா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.11.2006 வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்று, பூதவுடல் பூவோடை இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (55344)

**அம்பலவாணவர் வீதி,**
**உடுவில் கிழக்கு, சுன்னாகம்.**

தகவல்: **அ.நித்தியானந்தம்** (மகன்).

### சோமவாரம் நாளை ஆரம்பம்

கார்த்திகை சோமவாரம் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகிறது. வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய சோமவார திருவிழா நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகி ஒவ்வொரு கார்த்திகைத் திங்களும் பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கும்ப பூசையுடன் சோமவார திருவிழா ஆரம்பமாகி மாலை 4.30 மணிக்கு சுவாமி வீதியுலா வருதலுடன் திருவிழா நிறைவடையும். (203)

**பரீட்சை வினாத்தாள்**
தரம் 1முதல் 6 வரை 3ஆம் தவணைக்கான வினாத்தாள் பெற்றுக் கொள்ளலாம்.
**நாவலர் இன்ஸ்ரிரியூட்**
ஆனைப்பந்தி, யாழ்.

தரம் 5
புலமைப்பரிசில் 2007
• முதலாம் பரீட்சை இன்று
**BOND**

**CENTER FOR PEACE & RECONCILIATION**
08, Grousseault Road, Jaffna, Sri Lanka. Tel / Fax 021 222 8131

### மனித உரிமை டிப்ளோமா கற்கை நெறி

சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம் டிசம்பர் மாதம் 9 ம் திகதி மனித உரிமை டிப்ளோமா கற்கை நெறியை ஆரம்பிக்கவுள்ளது. விண்ணப்பதாரிகள் Catwas.Com, இல. 26, சோமசுந்தரம் அவனியூ, சுண்டிக்குளி என்னும் முகவரியில் மேற்படி கற்கை நெறிக்குரிய விண்ணப்ப படிவங்களை பெற்றுக் கொள்ளலாம். மட்டுப்படுத்தப்பட்ட இக்கற்கை நெறிக்கு 80 வரையிலான மாணவர்களை உள்வாங்க இருப்பதனால் விண்ணப்பப்படிவங்களை டிசம்பர் மாதம் 5 ம் திகதிக்கு முன்பாக கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்படுகின்றீர்கள். **(Director, Dip in Human Rights, Catwas.Com, 26, Somasundaram Avenue, Chundikuli, Jaffna)**

01 கற்கை நெறி பற்றிய விபரம்

- விரிவுரைகள் :- 100 மணித்தியாலங்கள்
- விரிவுரை நாட்கள் :- சனி, ஞாயிறு, விடுமுறை நாட்கள்
- விரிவுரையாளர் :- திரு. மகாலிங்கம் சுதர்ஷன் **LLB** (கொழும்பு) **LLM (Monash)** (சட்டத்துறை விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்) தலைமையிலான சட்ட வல்லுனர் குழு
- வெளிக்கள பயிற்சி :- 30 மணித்தியாலங்கள் (தரவு சேகரித்தல், கண்காணிப்பு, மீளாய்வு செய்த நீதிமன்றங்கள், காவல் துறை நிலையம், சிறைச்சாலை, மருத்துவசாலை, பாடசாலை, அதியுயர் பாதுகாப்பு வலயம் போன்றவற்றை தரிசித்தல், கருத்தரங்குகள் நடாத்துதல் போன்ற பல கூறுகளை கொண்டதாக இக்கள நெறி பயிற்சி அமையும்)
- ஆய்வுக்கட்டுரை :- 30 – 40 வரையிலான பக்கங்கள்

02 விண்ணப்பதாரிகளின் ஆகக் குறைந்த தகமைகள் :-

**A/L :-** ஒரே தடவையில் 3 பாடங்களில் திறமைச்சித்தி (3C புதிய பாடத்திட்டம்) அல்லது ஒரே தடவையில் 4 பாடங்களில் திறமைச்சித்தி (4C பழைய பாடத்திட்டம்)

**O/L :-** ஆங்கிலம், கணிதம், தமிழ் ஆகிய பாடங்களில் திறமைச்சித்தி (C)

இக்கற்கை நெறியின் நிறைவில் சிறப்பு தேர்ச்சி பெறும் 2 மாணவர்களுக்கு மேற்படி நிறுவனத்தில் நேர்முகப்பரீட்சையின் பின் வேலைவாய்ப்பு உள்ளது.

03 மேலதிக விபரங்களுக்கு –

**Director, Dip in Human Rights, Catwas.Com, 26, Somasundaram Avenue, Chundikuli, Jaffna Tel : 021 222 3805, E mail: catwasomi@sltnet.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர் தொழில்நுட்ப நிறுவனத்துக்கு ஆளணி புதிதாக நியமனம்

யாழ்ப்பாணம், நவ.19

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு அதிபர் உட்பட 6 பதவிகளுக்கு புதிதாக 6 பேர் நியமனம் பெற்றுள்ளனர்.

நிறுவனத்தின் புதிய அதிபராக வி. கருணாநிதியும், பதிவாளராக என். உமாகாந்தும், கணக்கியல் துறை விரிவுரையாளராக கே.பிரதீபனும் -

முகாமைத்துவத்துறை விரிவுரையாளராக வி.சாதனாவும், தகவல் தொழில்நுட்பத் துறை விரிவுரையாளராக எஸ். கரிகரகணபதியும், ஆங்கிலத்துறை விரிவுரையாளராக வி. சுமங்களாவும் நியமனம் பெற்றுள்ளனர்.

(202-79)

## 150 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அன்னை மடியில் 02 ★ 06 ★ 1982



ஆண்டவன் அடியில் 24 ★ 06 ★ 2006

### அமரர் வரதராஜா வசந்தன்

கடந்த ஆனி மாதம் 24ஆம் திகதி எதிர்பாராதவிதமாய் எம்மையெல்லாம் மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு பிரிந்த எங்கள் உறவின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (19.11.2006) ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளன.


அன்னாரது இல்லத்தில் இடம்பெறும் அந்தியேட்டிக்கிரியைகளிலும், அதனை தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

15ஆம் கட்டை,
உடுப்பிட்டி. (55300)

குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 15 ★ 09 ★ 1947



மறைவு 20 ★ 10 ★ 2006

### கந்தசாமி நித்தியானந்தம்

குலவிளக்காய் ஒளிவீசி குதூகலிக்கச் செய்தீரே!
நலமாக இனம் வாழ நல்லன பல செய்தீரே!
பலமான உன் உடலை இயமன் பதம்பார்த்து நின்றானோ!
தினம்தினம் கலங்குகின்றோம் நிம்மதியில்லாமல்

எங்கள் குடும்பத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு மரணச் சடங்கில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் எங்கள் துயரில் பங்கு கொண்டு பல வழிகளிலும் உதவிய அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் எம் இதயம் கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதர சகோதரிகள்.

131/4, பருத்தித்துறை வீதி,
நல்லூர். (55305)

## மரண அறிவித்தல்

### திருமதி கந்தையா சீதாலட்சுமி



புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது ஜேர்மனியை வசிப்பிடமாகக் கொண்டவருமான கந்தையா சீதா லெட்சுமி ஜேர்மனியில் 17.11.2006 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் பொன்னுச்சாமி சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகளும் சின்னத்தம்பி - தையல்முத்துவின் மருமகளும் காலஞ்சென்ற கந்தையாவின் (வர்த்தகர்) அன்பு மனைவியும், அருந்ததிதேவி , காலஞ்சென்ற ஸ்ரீகந்தராசா (கனடா), மங்களாதேவி , சிவானந்தராசா (ஜேர்மனி), செல்வானந்தராசா (ஜேர்மனி), இந்திராதேவி (ஜேர்மனி), புஸ்பலாதேவி (லண்டன்) ஆகி யோரின் தாயும் சண்முகானந்தன், மங்கயர் திலகம் (சித்திரா - கனடா), சந்திரகோபால் (மன்மதன்), தவமணி (ஜேர்மனி), வளர்மதி (ஜேர் மனி), சிவஞானசுந்தரமூர்த்தி (ஜேர்மனி), ஜெகநாதன் (லண்டன்) ஆகியோரின் மாமியும் தங்கராசா, பாகபதம், காலஞ்சென்ற ராசமணி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, கனகசபை ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*88/6 கோவில் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (55335)

தகவல்:
ச.மங்களாதேவி
மகள்.

# எம்மைச் சிக்குன் குனியா

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வெடிப்புக்கள் உள்ள மலசலகூடக் குழிகளில் இருந்து நுளம்புகள் வெளிவராவண்ணம் அவை திருத்தி அமைக்கப்பட வேண்டும். இவ்வாறான குழிகளில் வெடிப்புக்கள் இருப்பின் மாலை வேளைகளில் அவற்றில் இருந்து நுளம்புகள் வெளிவருவதை அவதானிக்கமுடியும்.

### நுளம்புகள் கடிப்பதனை நாம் எவ்வாறு தவிர்க்கலாம்?

நுளம்புகள் சிறிய புதர்களில் தங்கியிருந்து மனிதரைக் கடிக்கும். வெவ்வேறு நுளம்பு இனங்களும் குறிப்பிட்ட நேரங்களிலேயே கடிக்கும். ஈடிஸ் இன நுளம்புகள் சூரிய அஸ்த்தமனத்திற்கு 2 மணித்தியாலங்களுக்கு முன்பும், சூரிய உதயத்திற்கு பின் 2 மணித்தியாலங்களுக்கும் கடிக்கும். இந் நேரங்களில் வீடுகளுக்கு வெளியே இருத்தலைத் தவிர்த்தலும் வெளியில் இருக்கும் போது உடலைக் கூடியளவு மூடக்கூடிய தளர்வான ஆடைகள் அணிவதும் நன்மை தரும்.

வீடுகளுக்கு வெளியே புதர்களில் தங்கியிருக்கும் ஈடிஸ் நுளம்புகள் வீட்டிற்குள் பறந்து வந்து ஒருவரைக் கடித்து விட்டுத் திரும்பவும் வெளியே பறந்துவிடும். ஆகவே, மலேரியா தடுப்பு நடவடிக்கைகள் போன்று (டி.டி.ரி., மலத்தியோன் என்பன) பூச்சி கொல்லி களைத் தெளிப்பதனால் இவற்றைக் கொல்லமுடியாது.

இந்த நுளம்புகள் 50 மீற்றர் தூரத்தை ஒரேதடவையில் பறக்கக்கூடிய வல்லமையுடையவை. எம் வீட்டைச் சுற்றி 100 மீற்றர் தூரத்திற்குப் புதர்களைத் துப்புரவு செய்வதன் மூலம் நுளம்புகள் கடித்தலைத் தவிர்க்கமுடியும். குறைந்தது ஒரு வருடத்திற்கு 2 அல்லது 3 தடவைகளாவது துப்புரவு செய்யப்பட வேண்டும்.

### மாலையில் கதவு யன்னல்களை மூடி வையுங்கள்

கதவுகளையும் யன்னல்களையும் காலையிலும் மாலையிலும் மூடிவைக்க வேண்டும். முடியுமானால் நுளம்புகள் உட்செல்ல முடி யாத வலைகளை யன்னல்களுக்குப் பயன் படுத்தலாம். இரவு வேளைகளில் நுளம்பு வலைகளுக்குள் உறங்குதல் உகந்தது. பூச்சி களை அழிக்கக்கூடிய பூச்சிகொல்லிகள் சேர்க்கப்பட்ட **(Pyrethrin)** வலைகள் பெற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளமையால் இவற்றை உபயோகித்தல் சிறந்தது. இவ்வாறான வலைகள் பற்றி அறிய உங்களது பிரதேசத்துக்குரிய பொது சுகாதாரப் பரிசோதகரை அணுகலாம்.

இவை தவிர நுளம்புச் சுருள்கள், மின் உபகரணங்கள் (**electric vapour mats, liquid vaporizers**) நுளம்புகளை நெருங்க விடாது தடுக்கும் ஆற்றலுடைய எண்ணெய்கள் (**Repellent oil**) மற்றும் பூசு களிகள் (**Creams**) என்பவற்றினை உபயோகிப்பதன் மூலம் நுளம்புகள் கடித்தலைத் தவிர்க

### பூச்சி கொல்லிகள் தெளிப்பதால் நுளம்பை அழிக்க முடியுமா?

ஆம், ஆனால் அது இறுதிக்கட்ட நடவடிக்கையாகவே இருக்க வேண்டும். பூச்சிக் கொல்லிகள் சுற்றாடலை மாசுபடுத்தக் கூடியன. அத்துடன், மக்களின் உடல் ஆரோக்கியத்திற்கும் உகந்ததல்ல. இதன் பலனும் மிகக் குறுகிய காலத்திற்கு மட்டுமேயாகும்.

அநேக மக்கள் நோயினால் பாதிக்கப்பட்டும், அதேவேளையில் நுளம்புகளும் இந்த வைரஸ் கிருமியினால் பீடிக்கப்பட்டிருந்தால் மாத்திரமே புகையூட்டி மூலம் பூச்சிகொல்லிகளை உபயோகிக்கலாம்.

தேவையேற்படும் பட்சத்தில் சுகாதார வைத்திய அதிகாரிகளின் அறிவுறுத்தலுக்கேற்ப தேவையானவேளையில் புகையூட்டி இயந்திரங்களை (**Fogging Machines**)களைப் பயன்படுத்தி இத்தகைய செயற்பாட்டை மேற்கொள்ளுதல் சிறந்தது.


**இறைச்சிக்கோழி**

**கல்பேட் விண்பனைக்குண்டு.**

**தொடர்பு: New R.S.K. Farm,** மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்து 1973 இல் பிறந்த **5'3"** உயர செவ்வாய் குற்றமற்ற (22 பாவம்) கனடாவில் **Computer Engineer (Cisco Certified internet Expert)** ஆக தொழில் புரியும் மணமகனிற்கு வெள்ளை அழகான பட்டதாரி மணமகள் தேவை.

**தொடர்பு: தொ.பே.இல. 021 222 2168**

**பிரசவத்திற்குத் தேவையான பொருள்களுக்கு**

**சுன்னாகம்.** (55245)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அன்னை மடியில் 05 - 08 - 1942



ஆண்டவன் நிழலில் 20 - 10 - 2006

### அமரர் முருகேசு இராசரத்தினம்

பாசமுடன் எமை வளர்த்து
பல்கலையும் கற்க வைத்து
நல்வாழ்வு நாம் வாழ
நல்வழி காட்டிய தெய்வமே!
பாரினில் எமைத் தவிக்கவிட்டு
பாதிவழியில் பிரிந்ததேனோ?
காலமெல்லாம் உம்
நினைவுடனே
சிவபூதவராயர் தாள்
பணிந்திருப்போம்

அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (19-11-2006) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் இடம்பெறும் அன்னாரது வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொள்வதோடு, தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சிவபூதவராயர் கோயிலடி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (55294)

-குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி மங்கையர்க்கரசி தம்பிப்பிள்ளை

உயரப்புலம், ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் தற்போது லண்டனை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி மங்கையர்க்கரசி தம்பிப்பிள்ளை 09.11.2006 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான சின்னத்தம்பி - சீதாதேவிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், கணபதிப்பிள்ளை - பார்வதிப்பிள்ளையின் அன்பு மருமகளும் அமரர் தம்பிப்பிள்ளையின் அன்பு மனைவியும் ஞானேஸ்வரி (லண்டன்), சிவகுமார் (லண்டன்), ஜெயக்குமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் விஜயபாலன் (லண்டன்), நந்தினி (லண்டன்), சத்தியா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் செல்லையா (உயரப்புலம், ஆனைக்கோட்டை), காலஞ்சென்ற விக்னேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் இராஜேஸ்வரி (கிளி), சண்முகநாதன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனியும் விஜயகாந்தன் - ஜெயந்தி, விஜயலதா - சுரேஷ், சுரேஷ், சுரேக்கா, சோபிதா, ஜெனித்தா ஆகியோரின் பேர்த்தியும் பிரவின், லக்ஷன் ஆகியோரின் அருமைப் பூட்டியுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.11.2006 வியாழக்கிழமை லண்டனில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தொடர்பு:*
***42 - Links Road,***
***vest - wickham***
***kent: BR4 OQW***
***U.K.***
*தொலைபேசி*
***0208 - 3256618***
***0208 - 6950759.*** (55333)

தகவல்:
பிள்ளைகள்,
மருமக்கள்.

### சந்திரசேகரம்பிள்ளை குலசிங்கம்

(முன்னாள் ஆங்கில ஆசிரியர், பரு/ வேலாயுதம் ம.ம.வி., நெல்லியடி ம.ம.வி.)



சந்திரசேகரம்பிள்ளை குலசிங்கம் 17.11.2006 வெள்ளிக்கிழமை அன்று காலமாகி விட்டார்.

அன்னார் பரு/ கரணவாய் காலஞ்சென்ற சந்திரசேகரம்பிள்ளை - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட மகனும், பரு/ புலோலியைச் சேர்ந்த காலஞ்சென்ற சுப்பிரமணியம் - இலக்கணநாயகி தம்பதியரின் சிரேஷ்ட மரு மகனும் பரு/ புலோலியைச் சேர்ந்த ஜெயபூபதியின் (இளைப் பாறிய ஆங்கில பாட ஆசிரிய ஆலோசகர், வட மராட்சி கல்விக் கோட்டம்) அன்புக் கணவரும் சுப்பிரமணியம் - சிவக்கொழுந்து, தணிகாசலம் - யோகாதேவி , சுந்தரலிங்கம் - திலகவதி (உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்), தயானந்தம் - விமலரெத்தினம் (கனடா), காலஞ்சென்ற சந்திரசேகரம்பிள்ளை - இராஜசிங்கம் (பொலிஸ் சார்ஜன்ட்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்வி கிருஷாந்தி (முன்னாள் ஆசிரியை, கரணவாய் பொன்னம்பல வித்தியாலயம், தற்போதைய ஆசிரியர் நல்லூர் தெற்கு விக்னேஸ்வர வித்தியாலயம்), திருமதி சுசாந்தி - சத்தியமூர்த்தி (லண்டன்) வசீகரன் (முன்னாள் முகாமையாளர், எக்ஸ்போ ஏவியேசன் யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தர்மலிங்கம் - சத்தியமூர்த்தி (லண்டன்), திருமதி வ.சுபத்திரா ஆகியோரின் மாமனும், செல்வன் வ. புருஷோத்தின் ஆசைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் யா/ கச்சேரி நல்லூர் வீதி 214ஆம் இலக்க இல்லத்தில் (யா/ சென். பெனடிக் வித்தி. அருகில்) நடைபெற்றுப் பூதவுடல் இன்று (19.11.2006) முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் செம்மணி இந்து மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(55318)

தகவல்:
மனைவி, பிள்ளைகள் சார்பில்
கு.வசீகரன் (மகன்),
தொ.பே. இல. 021 222 2438.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

## போர் முகம் காட்டப்படுகிறது

அடுத்த வருடத்திற்கு உரிய வரவு - செலவுத்திட்டத்தில், சென்ற ஆண்டை விட அதிக நிதி பாதுகாப்புத் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சர் பதவியையும் வகிக்கும் நாட்டின் உயர் தலைவரான ஜனாதிபதியே வரவு - செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கிறார்.

இந்த வருடத்துக்கான பாதுகாப்புச் செலவுகளுக்கு 96.21 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் அடுத்த வருடத்துக்கான - 2007ஆண்டுக்குரிய - பாதுகாப்புத்துறைக்கான உத்தேச நிதி ஒதுக்கீடு 139.55 பில்லியன் ரூபாவாகும். அதாவது 43.34 பில்லியன் ரூபா அதிகம்.

சமாதானப் பேச்சுக்கள், போர்நிறுத்த ஒப்பந்தம் என்ற பின்புலங்களின் மத்தியில் உத்தேச பாதுகாப்புச் செலவினம் 45 சத வீதம் அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

உண்மையாகவே இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு காணவேண்டும் என்பதில் மனமார்ந்த, விசுவாசமான, விருப்பம் அரசுக்கும் அதன் தலைவருக்கும் இருக்குமாயின், அவர் பாதுகாப்புச் செலவை 45 சதவீதத்தால் அதிகரிக்க நினைத்திருக்க முடியாது; அல்லது ஒப்புதல் அளித்திருக்கமுடியாது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி 7.8 வீதமாக உயர்ந்திருப்பதாக பெருமிதம் அடைந்திருக்கும் ஜனாதிபதி - நிதி அமைச்சர் - இந்த வருட இறுதியில் - இன்னும் ஓரிரு மாதங்களில் - இலங்கையின் பணவீக்கம் 17.1 சத வீதமாக உயரும் என்று பொருளாதார ஆய்வாளர்கள் எதிர்வு கூறியிருப்பதைக் கணக்கில் எடுத்ததாக இல்லை.

மொத்தத்தில் அடுத்த வருடத்துக்கான வரவு - செலவுத் திட்ட யோசனை மக்கள் நலனோம்பும், அவர்களின் வாழ்கைச் செலவு சுமையை - நாளாந்த வாழ்க்கையின் பளுவை - குறைப்பதில் கவனம் செலுத்துவதை விட பாதுகாப்புச் செலவை உயர்த்துவதிலேயே அதிகமாக ஈர்க்கப்பட்டிருக்கிறது.

இந்த வெட்ட வெளிச்சமான உண்மையை நாடாளுமன்றத்தில் மறுத்துரைக்க முனைந்திருக்கிறார் சபை முதல்வரும் அரசாங்க சமாதானப் பேச்சுக்குழுவின் தலைவருமான அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா.

பாதுகாப்புத்துறைக்கே ஏனைய துறைகளை விட அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதை ஒப்புக்கொண்டு அவர் ஆற்றிய உரையில், மீண்டும் போரைத் தொடங்குவதற்காக அவ்வாறு செய்யவில்லை என்று சப்புக்கட்டியிருக்கிறார்.

நாட்டின் பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுத்து - நாட்டைப் பயங்கரவாதிகளிடமிருந்து பாதுகாப்பதற்காகவே - இந்த வரவு செலவுத் திட்டத்தில் அதிக பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. தவிர மீண்டும் யுத்தத்தைத் தொடங்குவதற்காக அல்ல.

யுத்தம் ஒன்றைத் தொடங்கும் திட்டம் அரசிடம் இல்லை. பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்ப்பதே அரசின் நோக்கம்.

இவ்வாறு ஒன்றுக்கு மற்றது ஒத்திணையாத, முரண்பாடான, முலாம் பூசப்பட்ட கருத்தை அவர் முன்வைத்துள்ளார்.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா பயங்கரவாதிகள் என்று குறிப்பிடுவது யாரை? இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காண்பதற்கான சமாதானப் பேச்சுக்களில் கலந்துகொண்ட, இனியும் கலந்துகொள்ள வேண்டும் என்று தாம் விரும்பும் தமிழீழ விடுதலைப் புலிகளை அன்றி, வேறெவரையும் அல்ல! இதனை பாடசாலை மாணவனால் கூட இலகுவில் புரிந்துகொள்ள முடியும்.

இத்தகைய பின்னணியில் -

கடந்த நான்கரை வருடங்களுக்கு மேலாக நடைமுறையில் இருந்த போர்நிறுத்த ஒப்பந்தம், நூலிழையில் தொங்கிக் கொண்டிருக்கிறது.

பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயரின் விசேட பிரதிநிதியாக இலங்கைக்கு வந்துள்ள அயர்லாந்தின் முன்னாள் அமைச்சர் போல் மேர்பி கூறியது அதனை ஊர்ஜிதம் செய்யும் வகையில் அமைகிறது.

*போர்நிறுத்த ஒப்பந்தம் வெறும் காகிதத்தில் மட்டுமே உள்ளது* என்று அவர் கூறியிருப்பது மிகப் பொருத்தமான கூற்று - உண்மையான நிலைப்பாடு.

அவ்வாறிருக்க, பேச்சு மூலம் பிரச்சினையைத் தீர்ப்பதே அரசின் நோக்கம் என்று அமைச்சர் கூறுவதை உண்மையான - சரியான - வழிமுறை என்று எவ்வாறு கொள்வது?

சம்பந்தப்பட்ட இரு தரப்புகளிடையேயும் பரஸ்பர நம்பிக்கை இல்லை. அதனைக் கட்டி வளர்த்தாலே சமாதானப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்லமுடியும் என்று அவர் முன்வைத்திருக்கும் கருத்து அமைச்சரிடமும் அரசாங்கத்திடமும் இல்லை என்பது மிகத் தெளிவாகிறது.

சமாதானம் மலரவேண்டும் என்ற நம்பிக்கையும் உறுதிப்பாடும் இருந்துவிட்டால், அது நிச்சயம் சித்திக்கும் என்று அயர்லாந்துப் பிரச்சினையில் தாம் பெற்ற அனுபவத்தைக் கொண்டு போல் மேர்பி கூறியிருக்கின்றார்.

இதனைத் தாம் விடுதலைப் புலிகள் தரப்பிடம் கூறியதாக அவர் சொன்னபோதிலும் கூட, அரசாங்கத்துக்கும் இது சம அளவில் அல்லது பரிமாணத்தில் பொருந்தும்.

சமாதானம் மலரவேண்டும்; போர் ஒழியவேண்டும் என்பதில் இதய சுத்தியுடனான விருப்பம் இருக்குமானால், பாதுகாப்புச் செலவுக்கு அளவுக்கதிகமான நிதியை, அதுவும் வெளிநாட்டுக் கடனில் தங்கி நிற்கும் ஓர் நாட்டின் அரசு, பாதுகாப்புக்கு அதிக நிதியை ஒதுக்குவது ஏன்? அதற்கான தேவை உண்டு என்று எந்த வகைக் காரணத்தைக் கூறினும் ஏற்புடையதல்ல.

பாதுகாப்புச் செலவுகளை அதிகரிக்க அரசு உத்தேசிக்கிறது என்ற நிலை அதன் போர்முகத்தையே வெளிக்காட்டுகிறது.!

# இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வு இல்லையேல் மத்திய அரசு அலுவலகங்கள் முன் போராட்டம்

### தமிழக அமைப்புக்களின் கூட்டமைப்பு அறிவிப்பு

சென்னை,நவ.19

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காணாவிட்டால் தமிழகத்தில் உள்ள மத்திய அரசு அலுவலகங்கள் முன் போராட்டம் நடத்துவோம் என தமிழகத்தில் உள்ள அமைப்புகளின் கூட்டமைப்பு எச்சரிக்கை விடுத்துள்ளது.

தமிழ் அமைப்புகள் கூட்டமைப்பின் அவசரக் கூட்டம் தலைவர் புலவர் கு. பச்சைமால் தலைமையில் நடைபெற்றது.

டாக்டர் அல்போன்ஸ் டானியல், அரிமா ரவீந்திரன், புலவர்செல்வம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் புலவர் கு.பச்சைமால் பேசுகையில் கூறியதாவது:-

இலங்கையில் தமிழர் கிராமங்கள், குழந்தைகள் காப்பம், அகதிகள் முகாம், கோவில்களில் இலங்கை இராணுவம் குண்டு வீசி வருகிறது. இதனை தமிழ் கூட்டமைப்பு சார்பில் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இலங்கையின் மனிதாபிமானம் இல்லாத இந்தச் செயல்களை சர்வதேச சமூகம் கண்டித்து வரும் வேளையில் இந்திய அரசு மௌனம் சாதித்துக்கொண்டிருப்பது வேதனைக்குரியது.

இலங்கையில் துயரத்துக்குள்ளாகி இருப்பது தமிழர்களாக இல்லாமல் வங்காளிகளாகவோ, பஞ்சாபியராகவோ அல்லது ஆந்திரர்களாகவோ இருந்திருந்தால் மத்திய அரசு இப்பிரச்சினையை எப்போதே தீர்த்திருக்கும். தமிழ் மக்கள் இதனை உணரவேண்டும். அனைத்துக் கட்சிகளும் அமைப்புக்களும் இலங்கை அரசை கண்டிக்க வேண்டும்.

இலங்கையில் தமிழ் சமூகத்தை வேரோடு அழிக்கும் நடவடிக்கையில் சிங்கள அரசு ஈடுபட்டுள்ளது. சிங்களத் தலைவர்களும் அமைச்சர்களும்இந்தியாவுக்கு வருவதெல்லாம் இந்தியாவின் நாடி பிடித்துப் பார்பதற்கும் நல உதவிகள் பெறுவதற்குமே ஆகும். தமிழ் பிரதிநிதிகளை இந்திய அரசு ஏறிட்டு பார்ப்பதில்லை. ஈழத் தமிழர் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் கடமையும் வாய்ப்பும் சக்தியும் இந்தியாவுக்கு உள்ளது. பலநாட்டுத்தலைவர்களும் இதனை வெளிப்படையாகக் கூறிவிட்டனர்.

ராஜபக்ஷவின் வருகையோடு இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண இந்திய அரசு வகை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் மத்திய அரசை கண்டித்து தமிழகமே கொந்தளிக்கும். மத்திய அரசு அலுவலகங்களின் முன் தமிழ் கூட்டமைப்பு அறப் போராட்டங்களில் ஈடுபடும் - என்றார் அவர்.

டாக்டர் சிதம்பர நடராசன், சுகுமாரன், ஆதிலிங்கம், விசுவதிலகம் ஆகியோரும் பேசினர். (அ-1)

# ரவிராஜ் படுகொலை விசாரணை நம்பிக்கை அளிப்பதாக இல்லை

### நாடாளுமன்றத்தில் இரா.சம்பந்தன்

கொழும்பு, நவ.19

ரவிராஜ் கொலை தொடர்பாக தற்போது மேற்கொண்டு வரும் விசாரணை நம்பிக்கை அளிப்பதாக இல்லை- என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுத்தலைவர் இரா.சம்பந்தன் நேற்று நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்றுக்காலை 9.30 மணிக்கு சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம்.லொக்கு பண்டார தலைமையில் கூடியது.

வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் பின்னர் ஆர்.சம்பந்தன் விசேட அறிக்கை ஒன்றை விடுத்து தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கடந்த 10ஆம் திகதி காலை கொழும்பிலுள்ள பிரதான நெடுஞ்சாலையான எல்விட்டிகய மாவத்தையில் வைத்து கொடூரமாக படுகொலை செய்யப்பட்டார்.

அவருடன் அவரது மெய்ப்பாது காவலரான சாந்த லக்ஸ்மண லொக்வெய்யயும் படுகொலை செய்யப்பட் டார்.

ஒருவர் வீதியில் வைத்து வாகனங்களை நிறுத்த, மற்றக் கொலையாளி ரி-56ரக ரைபிளால் சரமாரியாக ரவிராஜையும் அவரது மெய்ப்பாது காவலரையும் நோக்கி வேட்டுக்களைத் தீர்த்துள்ளார். 'பின்னர் இரு கொலையாளிகளும் மோட்டார் சைக்கிளில் ஏறி தப்பிச்சென்றுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொலை இடம்பெற்ற வேளையில் இந்த நெடுஞ்சாலையில் பாதுகாப்புப் பிரிவினர் கடமையில் ஈடுபட்டிருந்தனர்.

ரவிராஜ் பிரபலமான அரசியல்வாதி சகல இன மக்களாலும் மதிக்கப்பட்டவர். இவருக்கு கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இன, மத பேதமின்றி பெருந்தொகையான மக்கள் அஞ்சலி செலுத்தினர். கொழும்பில் அன்னாரது கொலையைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டமொன்றும் நடைபெற்றது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஒரு பெறுமதிமிக்க நண்பனை இழந்து நிற்கின்றது.

ரவிராஜ் எதுவித அச்சமுமின்றி பகிரங்கமாக தமது கருத்தைத் தெரிவிக்க வல்லவர். யுத்தத்தை நிறுத்தக்கோரி அவர் பல ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டார். மனித உரிமை மீறல்களையும் அவர் எதிர்த்து போராட்டங்களை நடத்தியுள்ளார். அவரது கொலை சம்பந்தமான தற்போதைய விசாரணைகள் நம்பிக்கையளிப்பதாக இல்லை. முழு நாடும் சகலரும் இக்கொலை தொடர்பான உண்மையை அறிந்து கொள்ள வகை செய்யவேண்டும் - என்றார். (அ-2)

## நல்லூர் பகுதியில் நேற்றுத் தேடுதல்

யாழ்ப்பாணம், நவ.19

நல்லூர், முத்திரைச்சந்தை, கல்வியங்காடு உள்ளிட்ட பகுதிகளில் நேற்றுக் காலை முதல் படையினரால் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தப்பட்டது.

பெரும் எண்ணிக்கையான படையினர் நேற்று அதிகாலை முதல் நண்பகல் வரை நல்லூர், சங்கிலியன் வீதி, அரச வீதி, சட்டநாதர் வீதி, செம்மணி வீதி, கச்சேரி நல்லூர் வீதி போன்ற வீதிகளில் நின்று சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இவ்வீதிகளூடான போக்குவரத்துத் தடை செய்யப்பட்டு மக்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டபோதும் எவரும் கைதுசெய்யப்பட்டதாகத் தகவல் இல்லை. (1-203-79-15)

# செஞ்சிலுவை ஊடாகவே இலங்கைக்கு உணவுப்பொருள்களை அனுப்புங்கள்

### *முன்னாள் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கோரிக்கை*

சென்னை, நவ.19

இலங்கைத் தமிழருக்கு தேவையான உணவுப்பொருள்கள் மற்றும் மருந்துப் பொருள்கள் இலங்கை அரசு மூலம் அனுப்பாமல் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் வழங்கவேண்டும் என்று முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதா கோரியுள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து சென்னை இலங்கைத் துணைத் தூதரகம் முன் போராட்டம் நடத்த, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, தி.மு.க. அரசிடம் அனுமதி கேட்டும் அதைத் தராமல் மறுத்ததும் வைகோவைக் கைது செய்ததும் கண்டனத்துக்குரியது.

இதுபோன்ற மக்கள் நலனுக்கான போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் முக்கிய ஜனநாயகக் கடமைகளாகும். இது போன்ற போராட்டங்களுக்கு எனது ஆட்சியில் முறையாக அனுமதி தரப்பட்டது.

ஆனால், இப்போதைய தி.மு.க. அரசு அனுமதி வழங்க மறுத்து மக்கள் விரோத செயலில் ஈடுபட்டுள்ளது.

தற்போது மத்திய அரசு இலங்கையில் அவதிப்படும் தமிழர்களுக்கு உணவுப் பொருள்களை அனுப்புவதாக அறிவித்துள்ளது. இந்தச் சூழ்நிலையில் இலங்கை அரசின் மூலமாக இத்தகைய உதவிகள் எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களைச் சென்றடையும் என்பது கேள்விக்குரியதாகும்.

எனவே, இலங்கைத் தமிழர்களுக்குத் தேவையான உணவு மற்றும் மருந்துகளை இலங்கை அரசு மூலம் வழங்காமல் செஞ்சிலுவைச்சங்கம்மூலம் அனுப்பவேண்டும் என ஜெயலலிதா கூறியுள்ளார்.

# திருநெல்வேலியில் இருவரை காணவில்லை என முறைப்பாடு

யாழ்ப்பாணம், நவ.19

திருநெல்வேலிப் பகுதியில் நேற்று முன்தினம் இரு இளைஞர்கள் காணாமற் போயுள்ளனர் என்று அவர்களது உறவினர்களால் யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலி பாரதிபுரத்தைச் சேர்ந்த ரவி ரஜீவன் (வயது 18), திருநெல்வேலி இராஜவீதியைச் சேர்ந்த இந்திரன் கமலதீபன் (வயது 18) ஆகிய இருவருமே காணாமல் போயுள்ளனர் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர்கள் இருவரும் நேற்றுமுன்தினம் நண்பகலளவில் அச்செழுவில் உள்ள உறவினர் வீடொன்றுக்குச் சென்றுள்ளனர் என்றும் -

அதன்பின்னர் வீடுதிரும்பவில்லை என்றும் - உறவினர்களது முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(1-203-79)

## நாளை

கார்த்திகை 04
திங்கட்கிழமை
20.11.2006
திதி : அமாவாசை
பின்னிரவு : 04.09
நட்சத்திரம் : விசாகம்
பின்னிரவு : 2.25
[illegible]
[illegible]

# யாழ். குடாநாட்டுக்கு விமானம் மூலம் 4ஆயிரம் கிலோ உணவுப் பொருள்கள்

குடாநாட்டுக்கு 4 ஆயிரத்து 400 கிலோகிராம் உணவுப்பொருள்கள் விமானம் மூலம் எடுத்துவரப்பட்டுள்ளதாக பலாலி பாதுகாப்பு நடவடிக்கை தலைமையகம் அறிவித்துள்ளது.

பாதுகாப்புத் தலைமையகம் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

குடாநாட்டில் நிலவும் பொருள்களுக்கான தட்டுப்பாட்டை அடுத்து, யாழ். பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் பி.ஏ. சந்திரசிறியின் ஆலோசனைப்படி, பொதுமக்களின் நலன்கருதி, படையினர் நிலைகொண்டுள்ள பல பிரதேசங்களில் வியாபார நிலையங்கள்திறக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் 17ஆம் திகதி விமானம் மூலம் கொண்டு வரப்பட்ட பொருள்கள் இந்த நிலையங்கள் மூலம் கட்டுப்பாட்டு விலைகளில் விரைவில் விற்பனை செய்யப்படும்.

அதேவேளை, 'கிறின் ஓஷன்' கப்பல் மூலம் கடந்த 16 ஆம் திகதி 309 பயணிகள் யாழ்ப்பாணத்துக்கும் கடந்த 17 ஆம் திகதி 309 பயணிகள் திருகோணமலைக்கும் கூட்டிச்செல்லப்பட்டுள்ளனர். யாழ். சிவில் நிர்வாகஅலுவலகத்தின் ஒத்துழைப்போடு இந்தப்பணி பூர்த்தி செய்யப்பட்டது.

பயணிகளுக்கு இராப் போசனம் உட்பட மருத்துவ வசதிகளும் படையினரால் வழங்கப்பட்டன - என்று உள்ளது. (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டுமென்பதற்காகவே ஐ.தே.கட்சி வரவு-செலவுத் திட்டத்தை ஆதரிக்கின்றது

## பந்துல குணவர்த்தன எம்.பி. விளக்கம்

கொழும்பு, நவ.19

இந்த வரவு - செலவுத் திட்டம் மூலம் நாட்டிற்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை. என்றாலும், நாட்டில் மீண்டும் ஒருமுறை யுத்தம் ஏற்படாமல் நிலையான சமாதானம் ஒன்று ஏற்படவேண்டும் என்ற நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சி அரசைக் கவிழ்க்க விரும்பாது இந்த வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளது.

இவ்வாறு ஐ.தே.கவின் எம்.பி. பந்துல குணவர்த்தன நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

இந்த வரவு-செலவுத்திட்டத்தில் இந்நாட்டு மக்களுக்கு எதுவும் கிடைக்கப் போவதில்லை. ஏழை மக்களின் துயர் துடைக்கும் ஒரு வரவு - செலவுத்திட்டமாக இது இல்லை.

நாட்டில் பசி, பட்டினி அதிகரித்துள்ள நிலையில் அவற்றைப் போக்குவதற்கான நடவடிக்கைகள் எதுவும் இந்த வரவு-செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்படவில்லை.

எல்லாத் திட்டங்களும் தெளிவின்றி பட்டும்படாமலும் தொட்டுக்காட்டப்பட்டுள்ளன. வேலைவாய்ப்புகள் வழங்குவது பற்றியோ, வறுமை ஒழிப்பு பற்றியோ, அபிவிருத்தி பற்றியோ எதுவும் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை. எல்லாம் மேலெழுந்த வாரியாகவே உள்ளன.

இருந்தாலும் நாம் இந்த வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளோம். அது இந்த வரவு-செலவுத் திட்டத்தை ஏற்று அல்ல நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கில்.

நாம் இந்த வரவு-செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்து அரசைக் கவிழ்க்க விரும்பவில்லை. இந்த அரசிற்கு முழு ஆதரவையும் வழங்கி நிலையான சமாதானத்தை உருவாக்கவே விரும்புகிறோம்.

யுத்தம் ஒன்று தொடங்கினால் இந்த வரவு-செலவுத் திட்டத்தில் கூறப்பட்டவையெல்லாம் செல்லாக் காசுகளாகிவிடும். நாட்டின் அபிவிருத்தி கொத்துரொட்டிபோல் ஆகிவிடும். ஆகவேதான் நாம் இந்த வரவு-செலவுத் திட்டத்திற்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளோம் - என்றார்.

# பாவனையாளர் பாதுகாப்புச் சபைகள்; அமைச்சர் டக்ளஸ் நடவடிக்கை

யாழ்ப்பாணம், நவ.19

குடாநாட்டில் பொருள் விநியோகத்தை சீர்செய்யும் நோக்கில் பாவனையாளர் பாதுகாப்புச் சபைகளை அமைக்க சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்துள்ளார்.

சமூக சேவைகள் மற்றும் சமூகநலத் துறை அமைச்சு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அச்செய்திக்குறிப்பில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

குடநாட்டு மக்களுக்கான உணவு மற்றும் அத்தியாவசிய பொருள்களுக்கான விநியோகத்தின் போது பொருட்களின் பாது காப்பு, உரிய நிறை, நியாயவிலை என்பவற்றுடன் அப்பொருள்கள் சரியான முறையில் மக்களைச் சென்றடைகின்றனவா என்பவற்றை உறுதிப்படுத்தும் முகமாகவும்-

அதன் மூலம் மக்கள் முகம் கொடுத்து வருகின்ற நெருக்கடி நிலைமைகளை அகற்றி அம் மக்களுக்கான பொருள்களின் விநியோகத்தை சீர்செய்யும் நோக்கிலும் பாவனையாளர் பாதுகாப்புச் சபைகளை அமைப்பதற்கு சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நட வடிக்கைகளை எடுத்துள்ளார்.

எழுத்து மூலமாகவும் தொலைபேசி வாயிலாகவும் நேரடியாகவும் குடாநாட்டு மக்கள் அமைச்சரிடம் முன்வைத்துள்ள முறைப்பாடுகளை அடுத்தே அமைச்சர் இந்தநடவடிக்கையினை ஆரம்பித்துள்ளார்.

கூட்டுறவு சபைகளின் இயக்குநர்கள் சார்பாகக் குழுக்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்றவர்களில் சிலரையும் உணவுப் பங்கீட்டு அட்டைகளைக் கொண்டிருப்பவர்களில் சிலரையும் இணைத்து கூட்டுறவு சங்கக்கிளை கள் தோறும் மேற்படி பாவனையாளர் பாது காப்பு சபைகள் அமைக்கப்படவுள்ளன.

யாழ்.குடாநாட்டு மக்களுக்கான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள் களுக்கான விநியோகம் தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேரடியாகவே மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு ஏது வாக யாழ். அரசாங்க அதிபர் தனது ஆய்வு அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார்- என்று உள்ளது. (அ-1)

## ஜனாதிபதியின் பிறந்ததினம் நேற்று

கொழும்பு, நவ 19

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 61 ஆவது பிறந்ததினமும் அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்ற ஓராண்டு பூர்த்தியும் நேற்று சமய வைபவங்களுடன் கொண்டாடப்பட்டன.

கதிர்காமம் ஸ்ரீ விகாரை, திபுல்கல விகாரை ஆகிய இடங்களில் சமய நிகழ்வுகள் இடம்பெற்றன.

அலரிமாளிகையில் நேற்றிரவு முழுவதும் பிரித் ஓதும் நிகழ்வு நடைபெற்றது. (அ-1)

## விநாயகபுரத்தில் இளைஞர் கடத்தப்பட்டுக் கொலை!

அம்பாறை, நவ. 19

அம்பாறை மாவட்டம் விநாயகபுரத்தில் 22 வயதுடைய அருள் என்ற இளைஞர் நேற்றுமுன்தினம் காலை இனந்தெரியாத ஆயுதபாணிகளால் கடத்திச் செல்லப்பட்டு பின்னர் சுட்டுக்கொல்லப்பட்டு சடலமாக வீதியில் போடப்பட்டார்.

நேற்றுமுன்தினம் அதிகாலை 5.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கிறது. இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணைக் குழு ஒன்றைச் சேர்ந்தவர்களே இவரைக் கடத்திச்சென்று சுட்டுக்கொன்றனர் என அப்பகுதி மக்களின் தகவல்களை மேற் கோள்காட்டி இணையத் தகவல்கள் செய்தி வெளியிட்டன.

## அப்பாவி மக்களைக் கொல்லும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு நடக்கும் வன்செயல்களுக்கும் ஏதுவாக இருக்கலாம்.

♦ ஏ-9 பாதை மூடப்பட்டதனால் யாழ்ப்பாணத்திலும் அதன் சுற்று வட்டாரங்களிலும் உருவாகியுள்ள உணவு மற்றம் அத்தி யாவசியப் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு குறித்து உங்கள் கவலையை நாங்களும் பகிர்ந்து கொள்கிறோம்.

**மனிதாபிமான உதவிகளை அனுப்பியுள்ளோம்**

♦ ஸ்ரீலங்காவின் வடக்கிலும் கிழக்கிலும் உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதைக் கவனத்தில் எடுத்து அரிசி, சீனி, பால்மா ஆகியவற்றை கணிசமான அளவில் மனிதாபிமான ரீதியில் அனுப்பி வைத்துள்ளோம். அவை போதுமானவையாக இருக்காது என்பதனை நான் ஏற்றுக் கொள்கிறேன். இலங்கை அரசாங்கமும் கப்பல் மூலம் உணவு வகைகளை அனுப்பி வைப்பதாக நான் அறிகிறேன்.

♦ இலங்கையின் வடக்கு கிழக்கில் ஏற்பட்டுள்ள உணர்வார்ந்த நிலையையும் அங்குள்ள தமிழ் மக்களின் கதி குறித்து நாம் முழு அளவில் கவனத்தில் கொண்டுள்ளோம்.

**ஆபத்தான ஆயுதங்களைப் பயன்படுத்தக்கூடாது என அறிவுறுத்து**

♦ இலங்கை அரசு அங்குள்ள தமிழ் மக்களுக்கு எதிரான தாக்குதல்களுக்கு ஆபத்தான இராணுவத் தளபாடங்களைப் பயன்படுத்தக்கூடாது என்பதில் நாம் பெரும் கவனம் எடுத்துள்ளோம் என்பதை நீங்கள் நன்கறிவீர்கள்.

♦ இலங்கையின் பிரஜைகள் என்ற வகையில் தமிழர்களின் உரிமைகளையும் சிப்புரிமைகளையும் மதிக்கவேண்டும் என் பதனை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அந்த நாட்டு அரசுக்கு ஆணித்தரமாக எடுத்துக் கூறியுள்ளோம். மீண்டும் அதை வலியுறுத்தி யுள்ளோம்.

♦ அப்பாவி மக்களின் உயிரிழப்புகள் அங்கு இடம்பெறாதிருக்க எங்களால் இயன்ற எல்லாவற்றையும் இராஜதந்திர வழியினூடாகச் செய்வோம் என்பதனை உறுதி செய்கின்றேன். (அ)

## தாண்டிக்குளத்தில் கிளைமோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேவன் (வயது 21 - யாழ்ப்பாணம்), கே.அம்பிகா (வயது 24 - கரவெட்டி) ஆகியோர் உட்படப் பத்து மாணவர்கள் காயமடைந்தனர்.

குறித்த விவசாயக் கல்லூரியில் துப்புரவுப்பணியில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் கிளைமோர் வெடிப்புச்சத்தம் கேட்டதும் நிலத்தில் வீழ்ந்து படுத்தனர் என்றும் - சிறிது நேரத்தில் அங்கு வந்து சேர்ந்த இராணுவத்தினர் அந்த மாணவர்களை எழுந்து வரு மாறு கூறிவிட்டு அவர்களை நோக்கி சரமாரியாகச் சுட்டனர் எனவும் சம்பவத்தில் உயிர் தப்பிய ஏனைய மாணவர்கள் தெரிவித்தனர்.

''நாங்கள் மாணவர்கள் எங்களை சுடாதீர்கள் என்று எல்லோரும் பல தடவைகள் உரத்துக் கத்தினோம். ஆமிக்காரர் அதனைப் பொருட்படுத்தாமல் குழறக் குழறச் சுட்டார் கள்'' என்றும் பாதிக்கப்பட்ட மாணவர்கள் அழுதழுது கூறினார்கள்.

சம்பவம் நடந்த இடத்துக்கு வவுனியா மாவட்ட நீதிவான் எம்.இளஞ்செழியன், பொலீஸ் உயரதிகாரிகள் மற்றும் போர் நிறுத் தக் கண்காணிப்புக் குழுவினர் ஆகியோர் சென்று விசாரணை நடத்தினர். கிளைமோர் தாக்குதல் நடந்த இடத்தையும் அதில் சிக்கிய ட்ரக் வண்டியையும் பார்வையிட்ட அவர்கள் அது குறித்த தகவல்களையும் கேட்டறிந்தனர்.

கிளைமோர் தாக்குதலுக்கு பின்னர் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பாக விசாரணைகளை நடத்தி சம்பந்தப்பட்ட மாணவர்களிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்யுமாறு நீதிவான் பொலிஸாருக்கு உத் தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கருத்து வெளியிட்ட இராணுவ உயரதிகாரி ஒருவர், குறித்த கிளைமோர் வெடிப்பு சம்பவத்தின் பின்னர் மாணவர்களுக்குப் பின்புறமாக நின்று சில ஆயுததாரிகள் இராணுவத்தினர் மீது துப் பாக்கிச் சூடு நடத்தினர் எனவும் - அப்போது படையினர் திருப்பிச் சுட்டபோதே மாணவர் கள் இடையில் அகப்பட்டு மரணமடைந்தனர் என்றும் - கூறினார்.

இந்தக்கிளைமோர் தாக்குதலை விடுதலைப் புலிகள் நடத்தினர் என்று அரசின் பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பான பேச்சாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல கூறினார்.

எனினும் - இதனை விடுதலைப் புலிகளின் இராணுவப்பேச்சாளர் இளந்திரையன் மறுத் துள்ளார்.

'' விடுதலைப்புலிகள் குறித்த தாக்குதலை நடத்தவில்லை, புலிகள் தற்காப்புத் தாக்குதல்களை மாத்திரமே நடத்துகின்றனர். மாணவர்கள் சுட்டுக்கொல்லப்பட்டமைக்கு அரசு பொறுப்புக்கூறியே ஆகவேண்டும்'' என்று அவர் கூறினார்.

## கோஷங்கள், சுலோகங்களு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒலி யின் மத்தியில் அவரால் உரையாற்ற முடிய வில்லை.

சபாநாயகர் காலை 10.10 மணிக்கு சபையை சிறிது நேரத்துக்கு ஒத்திவைத்து கட்சித்தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டினார். சபை ஒத்திவைக்கப்பட்ட பின்னரும் கூட்டமைப்பு எம்.பிக்களின் கோஷம் தொடர்ந்தது.

கூட்டமைப்பு எம்பிக்கள் ஏந்தியிருந்த அட்டைகளில் ஒன்றில் கேலிச்சித்திரமொன்று வரையப்பட்டிருந்தது. அந்தக் கேலிச்சித்தி ரத்தில் ஜனாதிபதியின் படம் வரையப்பட்டி ருந்தது.

தடியொன்று தாடியுடனுள்ள மனித முகத்துடன் ஜனாதிபதியின் கால்களுக்கிடையில் இருந்து, ரவிராஜ் எம்பியை நோக்கி துப் பாக்கி வேட்டுக்களைத் தீர்ப்பது போன்று கேலிச்சித்திரம் வரையப்பட்டிருந்தது.

கூட்டமைப்பு எம்.பிக்கள் கோஷம் எழுப்பியபோது அந்தச் சுலோக அட்டைகள் பலவும் சபைக்கு நடுவே பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த ன.

**கோஷங்கள்**

கூட்டமைப்பு எம்.பிக்கள் ஒலித்த கோஷங்கள் வருமாறு:-

★ கொல்லாதே கொல்லாதே, தமிழ் மக் களைக் கொல்லாதே.

★ பட்டினிபோடாதே பட்டினி போடாதே, யாழ்.மக்களை பட்டினிபோடாதே.

★ ரவிராஜின் கொலைக்கு அரசே - பொறுப்பு.

★ ரவிராஜை கொலை செய்தது மஹிந்த சிந்தனையா?

கூட்டமைப்பு எம்.பிக்கள் இவ்வாறு கோஷம் எழுப்பினர்.

**சுலோகங்கள்**

கூட்டமைப்பு எம்.பிக்களின் கைகளில் சுலோகங்கள் எழுதிய அட்டைகளும் காணப்பட்டன. ஆங்கிலத்திலும் தமிழிலும் சுலோகங்கள் எழுதப்பட்டிருந்தன.

இலங்கை அரசின் பயங்கரவாதம்! தமிழ் இன அழிப்புக்கு உத்தரவாதம்!

2005 இல் ஜோசப்! 2006 இல் ரவிராஜ்! 2007 இல் யார்?

மக்களுக்கு உணவு கேட்ட மாமனிதர் ரவிராஜுக்கு படுகொலைதான் பதிலா?

உலகமே, 130 பேரைக் கொன்ற சதாமுக்கு மரணதண்டனை! ஆயிரக்கணக்கான தமிழர்களைக் கொன்ற மஹிந்த ராஜபக்ஷவுக்கு என்ன தண்டனை?

கூட்டமைப்பு உறப்பினர்கள் பி.ப.1.30 மணியளவில் தமது ஆர்ப்பாட்டத்தை நிறுத் திக் கொண்டனர். (அ-2)

(மற்றொரு செய்தி 2ஆம் பக்கத்தில்)

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றார்கள்'' என்றும் அவர் சொன்னார்.

இந்தக் கடல் மோதலின் போது கடற்படையினருக்கு உதவியாக விமானப்படையின் எம்.ஐ.24 ரக ஹெலிகொப்ரர்கள் மற்றும் கிபிர் குண்டு வீச்சு விமானங்களும் கடற்புலிகள் மீது தாக்குதல் நடத்தின என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - இந்த மோதல்களின் போது கடற்படையினர் ஏவிய பீரங்கிக் குண்டுகள் தலைமன்னார் கரையோரப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன என்று அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இதனால் அப்பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கிச் சென்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. பேசாலைக்கும் தலைமன்னாருக்கும் இடையிலான வாகனப் போக்கு வரத்தும் நேற்று நண்பகல் வரை தடைப்பட்டிருந்தது. (த-12)

## வாகரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு பொருள்கள் அனுப்ப ஏற்பாடாகியுள்ளது என்று அரசதரப்பில் நேற்றுக் காலை உறுதிமொழி வழங்கப்பட்டிருந்தது.

எனினும், அங்கு சென்ற லொறிகள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

(மற்றொருசெய்தி2ஆம்பக்கத்தில்)(அ-1)


## விண்ணப்பிக்கவும்

செய்திப் பத்திரிகையில் உதவி ஆசிரியராகவும், அலுவலகச் செய்தியாளராகவும் பணியாற்றிய ஐந்து வருடங்களுக்குக் குறையாத முன் அனுபவம் உள்ளவர்கள் 25.11.2006ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

முழுமையான சுய விவரங்களுடன், சிபார்சு செய்யக்கூடிய இருவரின் நற்சான்றுப் பத்திரங்கள், கிராம சேவகரின் வதிவிட அத்தாட்சிப் பத்திரம் ஆகியவற்றை இணைத்து அனுப்புதல் அவசியம்.

யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கும், ஆங்கில அறிவுடையோருக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

வயதெல்லை - 25 முதல் 45 வரை.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விளம்பர இலக்கம்: 121
உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 19.11.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org